Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்


மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 கார்த்திகை 08 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷவ்வால் 10 (23.11.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:54

விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை
FedEx Express®
இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும் விரைவாக பொதிகள், கடிதங்களை அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
திருமுருகன் கொம் நெற்
259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Cylon Distributors) Tel - 021 222 7835 Fax - 021 222 7836
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

# இலங்கைக்கு ராணுவ உதவி வழங்க

# பாகிஸ்தான் அரசாங்கம் இணக்கம்!

## அந்நாட்டுப் பிரதமரின் கொழும்பு விஜயத்தில் தீர்மானம்



[கொழும்பு]

பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான மிக நெருக்கமான இராணுவ ஒத்துழைப்புக் குறித்தும் ஆயுத தளபாடங்களை கடனுதவி அடிப்படையில் இலங்கைக்கு வழங்குவது குறித்தும் பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அஸீசுக்கும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் இடையிலான சந்திப்பின்போது இணக்கம் காணப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

கொழும்பை வந்தடைந்த பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அஸீஸை நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதி சந்திரிகா சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் – பாகிஸ்தான் பிரதமர் தலைமையிலான குழுவில் – அந்த நாட்டின் பெற்றோலியத்துறை, ரயில்வே மற்றும் குடிநீர் விநியோகம். மின்சக்தி அமைச்சர்களும் மூன்று இராஜாங்க அமைச்சர்களும் பத்து செனட்சபை உறுப்பினர்களும் மற்றும் பாகிஸ்தான் வெளிவிவகாரச் செயலாளர் ஆகியோரும் –

[2 ஆம் பக்கம் பார்க்க]

## ஒன்பது மணிநேர வேலை ஒருபோதும் சாத்தியமில்லை!

### அமைச்சர் லால்கந்த தெரிவிப்பு

(கொழும்பு)

அரச துறையில் எட்டு மணிநேர வேலையில் எந்தவித மாற்றமும் இருக்காது என்று அமைச்சர் லால்கந்த தெரிவித்தார்.

எந்தவொரு அரசாங்கத்துக்கும் வேலைநேரத்தை நீடிக்கும் உரிமை கிடையாது. வரவு - செலவுத் திட்டத்தில் மேலும் ஒரு மணிநேரசேவை துண்டு அடிப்படையிலேயே பிரேரிக்கப்பட்டது. அரசாங்கம் தினசரி வேலைநேரத்தை ஒன்பது மணிநேரமாக நீடிப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காது.

அரசதுறை ஊழியர்களுக்கு அடிப்படைச் சம்பளத்தில் 53.7 சதவீத அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது. மாதாந்தம் 12500 ரூபாவுக்கு குறைவாகச் சம்பளம் பெறும் அரசாங்க ஊழியர்களுக்கு 2500 ரூபா சம்பள அதிகரிப்புக் கிடைக்கும். இது சம்பளப்படி அல்ல. சம்பள அதிகரிப்பு.

அரச ஊழியர்களில் சுமார் 90 வீதமானோர் இந்தத் தரத்துக்குள் அடங்குகின்றனர். சம்பள அதிகரிப்பு 20 சதவீதமானது என்று ஐக்கிய தேசியக் கட்சி கூறிவருவதை அவர் முற்றாக நிராகரித்தார்.

## முஸ்லிம் இளைஞர் நேற்று சுட்டுக்கொலை!

(பொலநறுவை)

பொலநறுவை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் கிராமம் ஒன்றில் நேற்றிரவு முஸ்லிம் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்றிரவு 7.30 மணிக்கும் 7.45 மணிக்கும் இடையில் மேற்படி இளைஞரின் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இரு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நீதிபதிகளின் பாதுகாப்பு அதிரடிப்படையினர் வசம்!

(கொழும்பு)

## சைக்கிளில் சென்றவரை மோதிக் கொன்றது பஸ்!

### சுன்னாகம் பகுதியில் நேற்றுச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் புன்னாலைக்கட்டுவன் வீதியில் - மதுபான விற்பனை நிலையத்துக்கு முன்பாக நேற்று இடம்பெற்ற பஸ் - சைக்கிள் விபத்தில், சைக்கிளில் சென்றவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

நேற்றுக்காலை எட்டு மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் மயிலிட்டியைச் சொந்த

சைக்கிளில் வந்துகொண்டிருந்த ஒருவரை மோதியது. இதனால், சைக்கிளில் சென்றவர் வீதியில் விழுந்தவுடன், பஸ்ஸின் சக்கரம் இவர் மீது ஏறிச்சென்றுள்ளது. இதனையடுத்து குறித்த நபர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை நடத்தியதுடன், பஸ் சாரதி

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் பலி!

(பருத்தித்துறை)

பருத்தித்துறைப் பகுதியில் மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

பருத்தித்துறை பன்னக்கட்டை கிராமத்தில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த சின்னராசா ஸ்ரீ விக்கினராசா (வயது 37) என்பவரே உயிரிழந்தவ

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மாளிகையை படம் பிடித்தவர் கைதாம்!

(கொழும்பு)

## நீதிபதிகளின் பாதுகாப்பு அதிரடிப்படையினர் வசம்!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நடந்த அவசர பாதுகாப்பு மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய, மேல் மாகாணத்திலுள்ள 40 உயர்நீதிமன்றம் மற்றும் மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு நேற்று முதல் விசேட அதிரடிப்படையினரின் பாது

(12 ஆம் பக்கம் பார்க்க)

முன்பாக நேற்று இடம்பெற்ற பஸ் - சைக்கிள் விபத்தில், சைக்கிளில் சென்றவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

நேற்றுக்காலை எட்டு மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் மயிலிட்டியைச் சொந்த இடமாகவும், கோண்டாவிலைத் தற்காலிக முகவரியாகவும் கொண்ட செல்லப்பா சாந்தகுமார் என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்றுக்காலை சுன்னாகம் பஸ் தரிப்பிடத்திலிருந்து வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் புன்னாலைக்கட்டுவன் நோக்கிச் சென்றவேளை, சுன்னாகம் சந்தியிலிருந்து சற்றுத் தொலைவிலுள்ள மதுபான நிலையத்துக்கு முன்னால் இவர் மீது ஏறிச்சென்றுள்ளது. இதனையடுத்து குறித்த நபர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை நடத்தியதுடன், பஸ் சாரதியையும் கைது செய்து மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் நீதிவான் சரோஜினி இளங்கோவன் முன்னிலையில் ஆஜர்படுத்தினர். இதனையடுத்து குறித்த சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

உயிரிழந்தவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

## ஜனாதிபதி மாளிகையை படம் பிடித்தவர் கைதாம்!

(கொழும்பு)

அலரிமாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகம் ஆகியவற்றைப் படம் பிடித்ததாகக் கூறி தமிழ் இளைஞர் ஒருவரைக் கைது செய்திருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு பஸ் ஒன்றில் பயணம் செய்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

### மாவீரர் நாளன்று

## நள்ளிரவு வரை சோதனைச் சாவடியை திறந்துவைக்கப் புலிகள் கோரிக்கை!

(வவுனியா)

மாவீரர் நாளன்று வன்னிப் பகுதியிலுள்ள துயிலும் இல்லங்களுக்கு பொதுமக்கள் சென்றுவர வசதியாக, ஓமந்தை இராணுவ சோதனைச் சாவடியை நள்ளிரவுவரை திறநது வைத்திருப்பது தொடர்பாக சமாதான செயலகம் ஊடாக கோரிக்கை விடுக்குமாறு படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

நேற்று வவுனியாவில் நடைபெற்ற படைத்தரப்பு - புலிகள் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. வவுனியா மாவட்ட அரசியற்துறையினருக்கும் இராணுவ அதிகாரிகளுக்கும் இடையில் நேற்று மாலை 4 மணியளவில் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் இராணுவத்தரப்பில் பிரிகேடியர் சிறிநாத் ராஜபக்ஷவும், புலிகள் தரப்பில் வவுனியா மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தர்மேந்திராவும் கலந்துகொண்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

**மண்ணின் மைந்தர்களான மாவீரர்களைப் பெற்றெடுத்த பெற்றோர்களையும் நான் போற்றுகின்றேன். உங்களது குழந்தைகள் தமது உயிருக்கு மேலாக தமது தாய்நாட்டின் சுதந்திரத்தை நேசித்தார்கள். இந்த உத்தமமானவர்களை ஒரு புனித இலட்சியத்துக்கு உவந்தளித்த பெற்றோராகிய நீங்கள் நிச்சயம் பெருமைகொள்ள வேண்டும். உங்களது குழந்தைகள் சாகவில்லை. சரித்திரமாகிவிட்டார்கள்.**

**வே.பிரபாகரன் – தமிழீழத் தேசியத் தலைவர்**

## மட்டக்களப்பு நகரப் பகுதியில் பொலிஸார் வீடுகளில் தேடுதல்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரிலும் நகருக்கு வெளியேயுள்ள முகத்துவாரம் வீதி மற்றும் பாலமீன்மடு ஆகிய இடங்களிலும் - இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து நேற்று அதிகாலை பத்துக்கும் மேற்பட்ட வீடுகளில் தேடுதல் நடத்தினர்.

நீதிமன்ற அனுமதிபெற்று தெரிவு செய்யப்பட்ட சில வீடுகளில் இந்தத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வீடுகளில் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாகவும், சந்தேகத்திற்குரிய நபர்களின் நடமாட்டங்கள் காணப்படுவதாகவும் கிடைத்த தகவலின் பேரில் இந்த தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 5.00 மணி முதல்

(12 ஆம் பக்கம் பார்க்க)



குண்டுத்தாக்குதல் இடம்பெற்ற புலிகளின் அரசியற்துறை அலுவலகத்தில் விசாரணை நடத்தும் படையினர்.

# தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 27-11-1982 தொடக்கம் 10-11-2004 வரை மாவட்ட வாரியாக வீரச்சாவடைந்த மாவீரர்களின் விரிப்பு

| ஆண்டு | யாழ்ப்பாணம் | | மட்டு-அம்பாறை | | வன்னி | | திருமலை | | முல்லைத்தீவு | | மன்னார் | | வெளி | | மொத்தம் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| 1982 | 01 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 01 | - | 01 |
| 1983 | 11 | - | - | - | - | - | 04 | - | - | - | - | - | - | - | 15 | - | 15 |
| 1984 | 20 | - | 07 | - | 03 | - | 08 | - | 06 | - | 06 | - | - | - | 50 | - | 50 |
| 1985 | 46 | - | 60 | - | 14 | - | 41 | - | 08 | - | 14 | - | 05 | - | 166 | - | 188 |
| 1986 | 91 | - | 92 | - | 20 | - | 48 | - | 21 | - | 36 | - | 09 | 01 | 317 | 01 | 318 |
| 1987 | 146 | 05 | 76 | - | 46 | 03 | 54 | - | 17 | 01 | 48 | 05 | 15 | - | 602 | 14 | 516 |
| 1988 | 126 | 07 | 114 | 01 | 39 | 01 | 37 | - | 18 | 01 | 18 | 01 | 16 | - | 368 | 11 | 379 |
| 1989 | 147 | 02 | 86 | - | 54 | - | 47 | - | 37 | - | 27 | - | 18 | - | 416 | 02 | 418 |
| 1990 | 277 | 41 | 178 | 04 | 140 | 11 | 124 | 02 | 73 | 11 | 64 | 01 | 33 | 02 | 889 | 72 | 961 |
| 1991 | 511 | 104 | 310 | 19 | 180 | 33 | 169 | 18 | 114 | 19 | 101 | 15 | 22 | 01 | 1407 | 109 | 1616 |
| 1992 | 224 | 45 | 240 | 09 | 83 | 06 | 65 | 01 | 40 | 07 | 48 | 06 | 13 | - | 713 | 74 | 787 |
| 1993 | 215 | 49 | 279 | 16 | 110 | 28 | 76 | 06 | 55 | 11 | 01 | 12 | 05 | - | 801 | 24 | 925 |
| 1994 | 90 | 11 | 161 | - | 30 | - | 40 | - | 18 | 01 | 22 | - | 09 | - | 363 | 18 | 381 |
| 1995 | 420 | 177 | 400 | 10 | 100 | 43 | 82 | 06 | 60 | 25 | 64 | 19 | 10 | 03 | 1219 | 288 | 1507 |
| 1996 | 446 | 142 | 320 | 33 | 129 | 53 | 63 | 13 | 54 | 26 | 55 | 14 | 04 | 04 | 1091 | 285 | 1376 |
| 1997 | 521 | 227 | 641 | 65 | 168 | 92 | 118 | 19 | 91 | 52 | 46 | 44 | 15 | 08 | 1600 | 507 | 2107 |
| 1998 | 361 | 270 | 429 | 94 | 133 | 140 | 99 | 36 | 58 | 69 | 54 | 22 | 17 | 16 | 1151 | 647 | 1798 |
| 1999 | 362 | 203 | 323 | 68 | 144 | 118 | 79 | 19 | 66 | 57 | 01 | 23 | 07 | 05 | 1052 | 693 | 1545 |
| 2000 | 474 | 318 | 228 | 79 | 234 | 179 | 100 | 27 | 105 | 78 | 62 | 45 | 35 | 17 | 1238 | 743 | 1981 |
| 2001 | 171 | 117 | 121 | 28 | 74 | 58 | 45 | 12 | 41 | 27 | 31 | 22 | 08 | 06 | 491 | 270 | 761 |
| 2002 | 10 | 05 | 05 | 05 | 06 | 01 | 04 | - | 02 | 03 | - | 01 | - | 01 | 26 | 16 | 42 |
| 2003 | 30 | 05 | 10 | 01 | 06 | 02 | 04 | 01 | 04 | 01 | 03 | 01 | 01 | - | 58 | 11 | 69 |
| 2004 | 02 | 03 | 30 | 01 | 03 | 01 | 01 | 01 | 02 | 01 | - | - | - | - | 38 | 07 | 45 |
| மொத்தம் | 4602 | 1731 | 4142 | 440 | 1766 | 769 | 1328 | 161 | 910 | 390 | 811 | 231 | 235 | 64 | 13994 | 3700 | 17780 |
| முழுமொத்தம் | 6533 | | 4582 | | 2535 | | 1489 | | 1300 | | 1042 | | 299 | | 17780 | | |

## தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 27.11.1982 தொடக்கம் 10.11.2004 வரை வீரச்சாவடைந்த கரும்புலி மாவீரர்களின் மாவட்ட ரீதியான தொகுப்பு!

| | தரைக் கரும்புலிகள் | | | கடற் கரும்புலிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத் | ஆண் | பெண் | மொத் | மொத் |
| யாழ்ப்பாணம் | 19 | 12 | 31 | 68 | 41 | 109 | 140 |
| மட்டு - அம்பாறை | 25 | 02 | 27 | 22 | - | 22 | 49 |
| வன்னி | 06 | 02 | 08 | 14 | 03 | 17 | 25 |
| திருமலை | 04 | - | 04 | 10 | 03 | 13 | 17 |
| முல்லைத்தீவு | 00 | 01 | 01 | 08 | 02 | 10 | 11 |
| மன்னார் | 04 | 01 | 05 | 09 | 01 | 10 | 15 |
| வெளி. | 03 | - | 03 | 02 | 01 | 03 | 06 |
| மொத்தம் | 61 | 18 | 79 | 133 | 51 | 184 | 263 |

## சைவ பரிபாலன சபை நடத்திய பேச்சுப் போட்டியில் பரிசுபெறும் மாணவர்களின் விபரம் வெளியாகின!

சைவ பரிபாலனசபை மாணவர்களிடையே நடத்திய பேச்சுப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன. இவர்களுக்கான பரிசில்கள் அடுத்த மாதம் நான்காம் திகதி நடைபெறவுள்ள குருபூசை தினத்தில் வழங்கப்படுமென சைவ பரிபாலனசபையின் தேர்வுச் செயலாளர் தெரிவித்தார்.

### கீழ்ப்பிரிவு

முதலாம் இடம் - ஜெயராசா ஜெயமதி (கிளிநொச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலயம்).

இரண்டாம் இடம் - கணநாதன் உஷாந்தன் (இந்துக் கல்லூரி).

மூன்றாம் இடம் - அ.சிறோமி (வேம்படி மகளிர் கல்லூரி).

### மத்திய பிரிவு

முதலாம் இடம்-ஹம்சினி கேதீஸவரக்குருக்கள் (வேம்படி மகளிர் கல்லூரி).

இரண்டாம் இடம் - யோ.சுதாகரன் (யூனியன் கல்லூரி).

மூன்றாம் இடம் - இமாஜினி வீரவாகு (ஸ்கந்தவரோதயக் கல்லூரி).

### மேற் பிரிவு

முதலாம் இடம் - புஸ்பனா பேரம்பலம் - (வேம்படி மகளிர் கல்லூரி).

இரண்டாம் இடம் - தெய்வேந்திரம் செந்தூரன் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி).

மூன்றாம் இடம் - தாரணி ஸ்ரீபாலச்சந்திரன் (இந்து மகளிர் கல்லூரி), வி.மதிவதனி (கிளிநொச்சி இந்துக் கல்லூரி).

## உடற்கல்வி பட்டதாரிகளுக்கு அவசர கலந்துரையாடல்

உடற்கல்வி ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட, அழைக்கப்படாத அனைத்து டிப்ளோமாதாரிகளையும் இன்று காலை 10.30 மணிக்கு நீராவியடி பிறைற்மன் கல்வி நிலையத்தில் ஒன்றுகூடுமாறு உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

## பரீட்சை திகதி ஒத்திவைப்பு

நாளை மறுதினம் நடைபெறவிருந்த 9 ஆம் தரத்துக்கான மாகாண மட்ட பொதுப்பரீட்சை பாடங்களான ஆங்கிலம், சுகாதாரம், உடற்கல்வி போன்ற பாடங்கள் எதிர்வரும் 30.11.2004 ஆம் திகதி நடைபெறுமென தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.


ராஜா யாழ்ப்பாணம்.




அட்டகாசம்

பு.நே 10.30, 2.30, 6.30, 9.30

ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.

2 வது வெற்றிவாரம் (குளிரூட்டப்பட்டது)

தனுஷ், பிரியா நடித்த

டிரீம்ஸ் (ரீல்ஸ்)

வெகுவிரைவில் : இரவு 9.00 (பு.நே) காட்சியாக

RAMBO - 3

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.00 (பு.நே) (சி-3319)

நாகம்ஸ் சுன்னாகம்

இந்தியாவிலும் - இலங்கையிலும் ஒரேதின வெளியீடான

R.B.சௌத்ரியின்

சரத்குமார், நமீதா, வடிவேல் நடித்த



சத்ரபதி (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.00, 7.00, 10.00 (பு.நே)

நிரஞ்சனாஸ் சங்கானை

அஜித், சிநேகா நடித்த

ஜனா (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

RAMBO - 3 (சி-2723)


## மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு!

யாழ். மாவட்ட வெண்மை வாணிப சங்கங்களின் ஒன்றியம் நடாத்தும் மாவீரர்களின் பெற்றோர், உருத்துடையோர் கௌரவிப்பு நிகழ்வு இன்று காலை 11.00 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள், வெண்மை வாணிபர்கள் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், யாழ்ப்பாணம், தீவகம் ஆகிய பிரதே சங்களின் சங்கத்தின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை - வலிமேற்குப் பிரிவில் உள்ள அனைத்து மாவீரர்களின் பெற்றோர்களும் இன்று பி.ப 2.30 மணிக்கு பண்ணாகம் மெய்கண்டான் மாகா வித்தியாலயத்தில் வைத்துக் கௌரவிக்கப்படவுள்ளனர். பண்ணாகம் கிராமசேவை அலுவலர் பிரிவில் இந்தப் பகுதி மாவீரர்களை நினைவு கூரும் முகமாக அவர்களது பெற்றோர்கள் தாசன் ரியூட்டரி நிர்வாகத்தினரால் கௌரவிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06 - 10 - 1927



மறைவு 23 - 11 - 1990

### அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்

(யாழ்.மா.சி.க.கூ.ச.சமாசத்தின் ஸ்தாபகரும் முன்னாள் தலைவரும்)

சமாசத்தின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்துச் சேவையாற்றிய கூட்டுறவாளர் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அன்னார் அவர்கள் மறைந்து 14 ஆவது ஆண்டில் இன்று நினைவு கூறுகிறோம்.

இல 637 (383),
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ்.மாவட்ட
சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்
சங்கங்களின் சமாசம்.

(C/3388)

# இம்முறை வரவு-செலவு திட்டத்தில் அபராதத் தொகைகள் அதிகரிப்பு!

(கொழும்பு)

அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் குற்றங்களுக்கான அபராதத் தொகைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி குற்றங்களுக்கான அபராதத் தொகைகள் 20 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன. 1898 ஆம் ஆண்டுக்குப் பின்னர் குற்றச் செயல்களுக்கான அபராதத் தொகைகள் பாரிய அளவில் அதிகரிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பம் இதுவாகும்.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றங்களுக்கு இதுவரை விதிக்கப்பட்டு வந்த 10 ஆயிரம் ரூபா தண்டனை புதிய வரவு - செலவுத்திட்டத்தின் மூலம் 25 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இதேவேளை, சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்தினால், இதுவரை விதிக்கப்பட்டு வந்த 350 ரூபா தற்சமயம் 1000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கொள்ளைச் சம்பவங்களுக்கான தண்டனை 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த பல வரவு - செலவு திட்டங்களில் பொதுவாக குற்றங்களுக்கான அபராதத் தொகைகள் 2 ரூபா முதல் 100 ரூபா வரையிலான அதிகரிப்பையே கொண்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் பிரதமர் இலங்கை விஜயம்!

(கொழும்பு)

இரண்டு நாள் விஜயத்தினை மேற்கொண்டு பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அசீஸ் தலைமையிலான அமைச்சர் குழுவொன்று இலங்கை வந்துள்ளது.

சார்க் அமைப்பின் தற்போதைய தலைமைத்துவத்தை வகிக்கும் பாகிஸ்தான், எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள 13 ஆவது சார்க் மாநாட்டில் பங்களாதேஷிடம் தலைமைத்துவத்தை கையளிக்கவுள்ளது.

அதற்கு முன்னதாக வலய நாடுகளிடையே மேற்கொள்ளப்படும் மரபுரீதியான உத்தியோகபூர்வ விஜயத்தின் ஒரு அங்கமாக பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அசிஸ் தலைமையிலான குழுவினர் இலங்கை வந்துள்ளனர்.

பாகிஸ்தான் பிரதமர் உள்ளிட்ட 33 பேர் அடங்கிய குழுவினரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வரவேற்றார்.

கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்து பாகிஸ்தான் பிரதமருக்கு விசேட இராணுவ அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டது. பாகிஸ்தான் பிரதமர் நேற்றுமுன்தினம் பிற்பகல் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

# விறகு ஆலைக்குள் படையினர்; கண்காணிப்புக்குழுவிடம் புகார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நல்லூரிலுள்ள விறகு ஆலையொன்றில் கடந்த சனிக்கிழமை அதிகாலை இராணுவத்தினர் காவலாளியை கட்டி வைத்து விட்டு தேடுதல் நடத்தியதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

19 வயதுடைய திருச்செல்வம் ஜசிந்தன் என்பவரே இராணுவத்தினரால் கட்டி வைக்கப்பட்டு சுமார் 3 மணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதிகாலை விறகு ஆலைக்குள் நுழைந்த இராணுவத்தினர் 3.00 மணி முதல் 6.00 மணிவரை தேடுதல் நடத்தினர்.

வன்னியிலிருந்து விடுதலைப் புலிகளால் கொண்டுவரப்பட்ட ஆயுதங்கள் இங்கு மறைத்து வைக்கப்பட்டிருப்பதாகக் கூறியே விசாரணை செய்து இந்தத் தேடுதலை இராணுவத்தினர் நடத்தியதாகப் புகார் செய்யப்பட்டது.

# மரண தண்டனை நிறைவேற்ற தூக்கு மரங்கள் தயார்நிலையில்

(கொழும்பு)

இலங்கையில் கடந்த சனிக்கிழமை தொடக்கம் மரண தண்டனை நிறைவேற்றப்படுவது மீண்டும் அமுலுக்கு வந்ததையடுத்து வெலிக்கடை, கண்டி, போகம்பரை சிறைச்சாலைகளில் தண்டனைகளை நிறைவேற்றுவதற்காக தூக்கு மரங்கள் தயார் நிலையில் இருப்பதாக நீதியமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் - கைதிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள போதிலும், அந்தத் தண்டனை கடந்த 30 வருடங்களாக அமுல் செய்யப்படுவதில்லை.

ஏற்கனவே மரண தண்டனை பெற்று சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவித்து வரும் கைதிகளுக்கும் இதனை நடைமுறைப் படுத்துவதா? இல்லையா? என்பது குறித்து இதுவரை தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கருத்துத் தெரிவிக்கையில் -

மனித உயிர்கள் மிகவும் பெறுமதி வாய்ந்தது. மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இது சரித்திரத்தில் முதல் தடவை. இதற்காக மரண தண்டனையை மீண்டும் அமுல்படுத்துவது என்பது நன்கு சிந்திக்கப்பட வேண்டிய விடயம்.

இதுபற்றி நாடாளுமன்றத்தில் பல தடவைகள் விவாதங்கள் நடைபெற்று வந்தாலும் இதுவரை முடிவெடுக்கப்படவில்லை.

மனித உயிர் பறிக்கப்படும்வரை இதுபற்றி முடிவெடுக்காமல் இருப்பது பெரும் குறை.

பாதுகாப்பு அமைச்சு என்ற ரீதியில் நாட்டின் சகல பிரஜைகளுக்கும் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது அவரது கடமை.

மரண தண்டனையை மீண்டும் அமுல்படுத்துவதன் மூலம் குற்றங்களை குறைத்து விட முடியுமா?

மக்கள் உயிர்களை பாதுகாக்க முடியாத அரசினால் என்ன பயன் என்று கேள்விகளை எழுப்பினார்.

# வரவு - செலவுத்திட்ட யோசனைகளை அரசு எவ்வாறு செயற்படுத்தப்போகிறது

## எஸ்.பீ.திஸநாயக்க சவால்

(கொழும்பு)

அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிக்காமல் இந்த வரவு - செலவுத் திட்ட யோசனைகளை எவ்வாறு அரசாங்கம் செயற்படுத்தப் போகிறதென்பதைத் தாம் பார்க்கப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்தார்.

நாட்டின் விலையுயர்வுகள் வாழ்க்கைச்செலவை 65 வீதத்தால் அதிகரித்துள்ளது. எனவேதான் அரசாங்கம், அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை 70 வீதத்தால் அதிகரிக்கப்போவதாக்த் தெரிவித்தது.

எனினும் தற்போதைய வரவு - செலவுத் திட்டத்தில் 20 வீதமான சம்பள அதிகரிப்பே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அரசாங்கம் மேலும் வாக்குறுதிகளை மக்களுக்கு கொடுத்துள்ளது. இதனை ஒரு போதும் நடைமுறைப்படுத்த முடியாது.



இதேவேளை, நேற்று கொழும்பில் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடத்திய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன, இந்த வரவு - செலவுத் திட்டம் மக்களுக்கு பாரிய பொருளாதார சுமையை கொடுத்திருக்கின்றது.

அத்துடன் அரசாங்க ஊழியர்களுக்கு 9 மணி நேர வேலை என்ற நிலைப்பாடும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகக் காணப்படுகிறது.

அரசாங்கம் சமர்ப்பித்துள்ள வரவு - செலவுத் திட்டத்தில் புள்ளிவிபரங்கள் யாவும் மாறுபட்ட வகையில் அமைந்திருப்பதால், அதனை ஆழமாக ஆராய நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமிக்கவேண்டும் என தாம் சபாநாயகரைக் கோரப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கம் வரவு - செலவுத் திட்ட துண்டுவிழும் தொகையை நிரப்ப வேண்டுமாயின் 29 பில்லியன் ரூபாய்களை அச்சடிக்க வேணடியுள்ளது.

இதனால் நாட்டில் பாரிய பணவீக்கம் ஏற்பட வாய்ப்புண்டு. எனவே அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டத்தை தமது கட்சி எதிர்த்து வாக்களிக்கப் போவதாக அவர் தெரிவித்தார்.





தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறையினரால் நடத்தப்பட்டுவரும் மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிப்பு விழா நேற்றுமுன்தினம் நிலாவெளி தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதில் தேசியக்கொடியை திருகோணமலை மாவட்ட துணைத்தளபதி வசந்தன் ஏற்றிவைப்பதை முதலாவது படத்திலும், குச்சவெளி கோட்ட இராணுவப் பொறுப்பாளர் குணம் பொதுச்சுடரை ஏற்றிவைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

*படங்கள் - சசிகுமார்*

## 3,227 நிலையங்களில் சாதாரணதர பரீட்சை

எதிர்வரும் டிசம்பரில் நடைபெறவுள்ள கல்விப்பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சையில் மூன்று இலட்சத்து 74 ஆயிரத்து 411 பாடசாலை பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

ஒரு இலட்சத்து 26 ஆயிரத்து 819 தனிப்பட்ட பரீட்சார்த்திகள் இந்தப் பரீட்சையில் தோற்றவுள்ளனர். இதற்காக நாடளாவிய ரீதியில் 3,227 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

# திருகோணமலை நகரில் பாதுகாப்பு அதிகரிப்பு!

(திருகோணமலை)

திருகோணமலை நகரிலும் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்தவார இறுதியில் யாழ். குடாநாட்டிலும் திருகோணமலையிலும் இடம்பெற்ற சூட்டுச்சம்பவங்களை அடுத்தே திருகோணமலை நகரில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

திருகோணமலையில் பொலிஸார் வாகனங்களை சோதனையிட்டு வருவதுடன் கால்நடை ரோந்துகளையும் அதிகரித்துள்ளனர். இராணுவத்தினரும் மேலதிக படையினரை கடமையில் ஈடுபடுத்தி திருகோணமலையில் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளனர்.

# கடற்படை ட்றக் மோதியதில் சைக்கிளில் சென்றவர் பலி!

(கொழும்பு)

வெடிபொருட்களை ஏற்றிச்சென்ற கடற்படையினரின் ட்றக் வண்டியொன்று நிட்டம்புவ நகரில் - சைக்கிளில் சென்ற ஒருவரை மோதியதில் அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் காலை ட்றக் வண்டியின் சாரதி தனியார் பஸ் வண்டியை முந்திச்செல்ல முற்பட்ட போதே அவரது கட்டுப்பட்டை இழந்து விபத்துக்குள்ளாகியது. ட்றக் வண்டியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

வெலிசறைக் கடற்படைத் தளத்தில் இருந்து இந்த ட்றக் வண்டி வெடி மருந்துகளைத் திருகோணமலை கடற்படை முகாமுக்கு ஏற்றிச் சென்று கொண்டிருந்தபோதே இந்த விபத்து நேரிட்டது.

# பசுபிக் சாரணர் முகாமில் பங்கேற்க விரும்புவோருக்கு

(கொழும்பு)


25 ஆவது ஆசிய பசுபிக் சாரணர் முகாம் டிசம்பர் 28 ஆம் திகதி தொடக்கம் ஜனவரி 3 ஆம் திகதி வரை பாங்கொக் நகரில் நடைபெறவிருக்கிறது. இதில் 12 வயது தொடக்கம் 17 வயதுக்கு உட்பட்ட சாரணர்கள் பங்குகொள்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு சாரணருக்கு பங்குகொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

பங்குகொள்ள விரும்பும் சாரணர்கள் தத்தமது மாவட்ட சாரணர் ஆணையாளருடாக இந்த மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னதாக சாரணர் தலைமைக்காரியாலயத்திற்கு அனுப்பி வைக்குமாறு, சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பான பிரதம சாரணர் ஆணையாளர் சி. பட்டுவங்கள அறிவித்துள்ளார்.

இந்த முகாமில் பங்குபற்றுபவர்கள் முகாம் கட்டணமாக 18,900 ரூபாவும், நிர்வாக செலவு மற்றும் விசா கட்டணமாக 5,000 ரூபாவும், விமானக் கட்டணம் 33,000 ரூபாவும் செலுத்தவேண்டும் எனவும் மாவட்ட சாரணர் ஆணையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தென்னாபிரிக்காவுக்கு எதிராக
# இந்திய அணி அதிரடி ஆட்டம்!



(கான்பூர்)

இந்திய - தென்னாபிரிக்க அணிகள் இடையேயான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கான்பூர் கிரீன்பார்க் மைதானத்தில் நடைபெற்று வருகிறது. முதலில் விளையாடிய தென்னாபிரிக்கா, இரண்டாவது நாள் ஆட்டநேர முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 459 ஓட்டங்கள் எடுத்திருந்தது. பொலக் 31 ஓட்டங்களுடனும், சோலெகிளி 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்றுக்காலை 9.30 மணிக்கு 3 ஆவது நாள் ஆட்டம் தொடங்குவதாக இருந்தது. ஆனால், கான்பூரில் கடுமையான பனி இருந்ததால் போட்டியைத் தொடங்குவதில் பாதிப்பு ஏற்பட்டது.

காலை 11 மணிக்கு நடுவர்கள் சைமன் ரபெல் - ஹாப்பர் ஆகியோர் மைதானத்துக்கு வந்தனர். மதியம் 12.10 மணிக்கு போட்டி தொடங்கும் என்று அறிவித்தனர். மதிய உணவு இடைவேளைக்குப்பிறகு போட்டி தொடங்கும் நேரமான 12.10 மணிக்கு ஆட்டம் மின்னொளியில் தொடங்கியது.

பனியால் ஆட்டம் 2 மணி நேரம் பாதிக்கப்பட்டது.

ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில் விக்கெட் காப்பாளர் சோலெகிளி ஆட்டமிழந்தார். அவர் 9 ஓட்டங்கள் எடுத்தார். அவரது விக்கெட்டை கும்ளே கைப்பற்றினார். அப்போது ஓட்ட எண்ணிக்கை 467 ஆக இருந்தது. 9 ஆவது விக்கெட்டுக்கு பொலக்குடன், பீற்றர்சன் ஜோடி சேர்ந்தார். பீற்றர்சன் அதிரடியாக விளையாடினார். ஹர்பஜன்சிங் வீசிய பந்தில் அவர் சிக்ஸர் அடித்தார். இதன் மூலம் அணியின் எண்ணிக்கை 500 ஓட்டங்களைத் தொட்டது.

பீற்றர்சன் 34 ஓட்டங்கள் எடுத்திருந்த போது ஹர்பஜன்சிங்கின் பந்தில் ஆட்டமிழந்தார். அவர் 24 பந்தில் 3 பவுண்டரிகள், ஒரு சிக்சருடன் 34 ஓட்டங்கள் எடுத்தார். பீற்றர்சன் ஆட்டமிழந்தபோது ஆட்டத்தை நிறுத்திக்கொள்வதாக கப்டன் சிமித் அறிவித்தார்.

அப்போது தென்னாபிரிக்கா 9 விக்கெட் இழப்புக்கு 510 ஓட்டங்கள் குவித்திருந்தது. தொடக்க ஆட்டக்காரர் ஹோல் 163 ஓட்டங்களும், புருயின் 83 ஓட்டங்களும் எடுத்தனர். கும்ளே 131 ஓட்டங்களைக் கொடுத்து 6



விக்கெட்டுக்களைச் சாய்த்தார். இந்திய வீரர்களில் அதிக விக்கெட் கைப்பற்றிய கபில்தேவின் சாதனையை (434) முறியடிக்க கும்ளேக்கு இன்னும் 5 விக்கெட் தேவை.

ஹர்பஜன்சிங் 2 விக்கெட்டும், கங்கூலி ஒரு விக்கெட்டும் எடுத்தனர்.

பின்னர் இந்திய அணி முதல் இனிங்ஸை தொடங்கியது. தொடக்க வீரர்களாக ஷேவாக்கும், கம்பீரும் களமிறங்கினார்கள். இருவரும் டெஸ்ட் ஆட்டம் என்பதை மறந்து ஒருநாள் விளையாட்டுப்போல் அதிரடியாக விளையாடினார்கள். இருவரும் சமமாக ஓட்டங்களைச் சேர்த்து வந்தனர். இருவரும் அதிரடியாக விளையாடியதால் ஓட்ட விகிதம் 4 ஓட்டங்களுக்குக்கீழ் குறையவே இல்லை.

42 ஓவர்கள் நிறைவில் 3 ஆவது நாள் ஆட்டம் முடிக்கப்பட்டது. இந்தியா 42 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 185 ஓட்டங்களைச் சேர்த்தது. இருவரும் டெஸ்ட் போட்டியில் முதல் விக்கெட்டுக்கு ஜோடியாக அடித்த அதிகபட்ச ஓட்டம் இதுவாகும்.



ஷேவாக் 85 ஓட்டங்களும், கம்பிர் 85 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். நான்காவது நாள் ஆட்டம் இன்று காலை 9.30 மணிக்குத் தொடங்கும்.

கான்பூர் மைதானத்தில் தென்னாபிரிக்கா 9 விக்கெட் இழப்புக்கு 510 ஓட்டங்களைக் குவித்தது. இந்திய மைதானத்தில் தென்னாபிரிக்காவின் அதிகபட்ச ஓட்டஎண்ணிக்கை இதுவாகும்.

இதற்கு முன்பு 2000 ஆம் ஆண்டு



பெங்களூர் மைதானத்தில் அந்த அணி 479 ஓட்டங்கள் எடுத்திருந்தது. இந்தியாவுக்கு எதிராக தென்னாபிரிக்காவின் அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை 563 ஓட்டங்களாகும்.

## கபடி உலகக் கிண்ணத்தை இந்தியா கைப்பற்றியது!

கபடிக்கான முதல் உலகக் கோப்பையை இந்தியா கைப்பற்றியுள்ளது.

மும்பையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற ஒருதரப்பான இறுதியாட்டத்தில் ஈரான் அணியை 55:27 என்ற கணக்கில் இந்திய ஆண்கள் அணி தோற்கடித்தது.

16 முறை பாடிச் சென்று 17 புள்ளிகளைக் குவித்து இந்திய அணியின் வெற்றியில் முக்கிய பங்காற்றிய சஞ்சீவ்குமார் போட்டி நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டார்.

இந்திய அணிக்கு நாலரை லட்சம் ரூபாவும், ஈரான் அணிக்கு 3 லட்சம் ரூபா பரிசும் வழங்கப்பட்டது.

ஞாயிறு காலை நடைபெற்ற அரையிறுதி ஆட்டங்களில் பங்களாதேஷை 39:19 என இந்தியாவும், கனடாவை 54:28 என ஈரானும் தோற்கடித்து முன்னேறின.

## கான்பூர் ஆடுகளத்தை சாடுகிறார் கார்த்திக்!



(கான்பூர்)

கான்பூர் ஆடுகளம் சுழற்பந்து வீச்சுக்குச் சாதகமாக இல்லை என்று இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் முரளி கார்த்திக் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது -

ஆடுகளம் துடுப்பாட்டத்திற்குச் சாதகம் அளிக்கும் வகையில் இருந்தது. பந்து வீச்சாளர்களால் விக்கெட்டைக் கைப்பற்றுவது எளிதாக இல்லை.

அத்தோடு பந்துவீச்சுத் தன்மையும் மாறவில்லை. முதல் இரண்டு நாளில் ஆடுகளம் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமாக இல்லை.

5 விக்கெட் கைப்பற்றிய கும்ளே இந்த விக்கெட்டுக்களை எளிதாகக் கைப்பற்றவில்லை. கடின போராட்டத்திற்குப் பின்பே அவரால் கைப்பற்றமுடிந்தது. இவ்வாறு முரளி கார்த்திக் கூறினார்.

## 67 ஓட்டங்களால் நமீபியாவை தோற்கடித்தது இங்கிலாந்து

(லண்டன்)

இங்கிலாந்துக்கு விஜயம் செய்திருக்கும் நமீபிய அணி, நேற்றுமுன்தினம் இங்கிலாந்து அணியுடன் சிநேகபூர்வ ஆட்டத்தில் 67 ஓட்டங்களால் தோல்வியுற்றது.

42 ஓவர்களைக் கொண்ட இந்தப் பயிற்சி ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நமீபிய அணி களத்தடுப்பில் ஈடுபடத்



தீர்மானித்தது.

முதலில் ஆடிய இங்கிலாந்து அணி 42 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 260 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் சோலங்கி - 28, பெல் - 0, வோகன் - 89, ஸ்ரரஸ் - 73, பீற்றர்சன் - 05, ஜோன்ஸ் - 01, மற்றும் கொலின்வூட் ஆட்டமிழக்காமல் - 31, கைல்ஸ் ஆட்டமிழக்காமல் - 06 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஸ்நைமன் மற்றும் பேகர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கூல்டர், பேகர் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து ஆடிய நமீபிய அணி 42 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 193 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது.

ஏ.கே. பேகர் - 21, கூல்டர் - 57, வோல்டர்ஸ் - 7, கார்க் - 66, மற்றும் கோல்டர்ஸ் ஆட்டமிழக்காமல் 22, ஸ்கைமன் ஆட்டமிழக்காமல் 14 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதனால் 67 ஓட்டங்களால் நமீபியா தோல்வியடைந்தது.

# விளையாட்டு

## மாவீரர் நினைவு உதைபந்தாட்டம் இறுதியாட்டத்தில் சென். அன்ரனிஸ்!

தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ் மாவட்டப் பிரிவினால் நடத்தப்பட்டு வருகின்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் - நேற்று முன்தின ஆட்டத்தில் - முதலில் காலிறுதியாட்டத்தில் சென். நீக்கிலஸ் அணியை எதிர்த்து பாடுமீன் அணியும், அரையிறுதியாட்டத்தில் சென். அன்ரனீஸ் அணியை எதிர்த்து சென். மேரிஸ் அணியும் மோதின.

முதலாட்டத்தில் சென். நீக்கிலஸ் அணியை எதிர்த்து பாடுமீன் மோதுகையில் - ஆட்டம் தொடங்கி முடியும்வரை இருபக்கத்து அணி வீரர்களும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்களல்ல என்பதையும், அதற்கு மேலாக இருபக்க கோல்காப்பாளர்களும் எம்முறையில் பந்தை அடித்தாலும் அந்தப் பந்தை மிகச் சாதுரியமாகத் தடுத்து வெளியேற்றிக் கொண்டிருந்தனர். இதனால் இடைவேளைக்கு முன்னர் இரு அணியாலும் கோல் அடிக்க முடியவில்லை.

அதைத்தொடர்ந்து இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கப்பட்டபோது - 5 ஆவது நிமிடத்தில் முறைதவறி விளையாடியமைக்காக பாடுமீன் அணிவீரர் ஒருவருக்கு சிவப்பு அட்டை காட்டப்பட்டதுடன், சென். நீக்கிலஸ் அணி வீரரின் கையில் பந்து பட்டமையால் பாடுமீன் அணியினருக்கு தண்டனை உதை கொடுக்கப்பட்டது. அப்பந்தைக் கூட சென். நீக்கிலஸ் கோல்காப்பாளர் மிகச் சிறப்பாகத் தடுத்தார். இந்த அரிய சந்தர்ப்பத்தை வீணடித்தமையே அவர்களின் தோல்விக்கும் வழிகோலியது.

தொடர்ந்தும் 10 வீரர்களுடன் பாடுமீன் அணி விளையாடிபோதும், இரு அணிகளாலும் கோல் எதனையும் போடமுடியவில்லை. இதனால், தண்டனை உதை மூலம் வெற்றி தீர்மானிக்கப்பட்டது. இதில் முதல் 5 சந்தர்ப்பம் வழங்கி இரு அணிகளும் தலா 2 கோல்களைப் போட்டு சமநிலையில் இருந்தன. அடுத்து ஒவ்வொருவரும் மேலும் ஒவ்வொரு கோலைப்போட மேலும் சமநிலையானது. அதன்பின்னர் சென்.நீக்கலஸ் அணி வீரர் அடித்தபந்தை, கோல்காப்பாளர் தடுத்தபோதும், பாடுமீன் அணிவீரர் பந்தைவெளியில் அடித்து 0 என்ற நிலையில் மேலும் சமனானது. அடுத்ததாக வந்த சென். நீக்கலஸ் அணிவீரர் மிக அற்புதமான கோலைப்போட பாடுமீன் அணி வீரர் வெளியில் அடித்ததனால், சென். நீக்கிலஸ் அணி பாடு மீன் அணியை 4:3 என்ற கோல்கணக்கில் தோற்கடித்து அரையிறுதிக்குத் தெரிவாகியது.

இதனைத் தொடர்ந்து இறுதியாட்டத்திற்குத் தெரிவுசெய்யும் போட்டியில் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து சென். மேரிஸ் அணி மோதியது. இதிலும் இரு அணிகளும் மிகச் சிறப்பாக விளையாடிக்கொண்டிருந்த போது - சென். அன்ரனிஸ் அணியினர் பதினோராவது நிமிடத்தில் , கோல்காப்பாளர் தடுமாறியபோதும், அதனைக்கோலாக்கத் தவறிவிட்டனர். இதனால் இடைவேளைக்கு முன்னர் இரு அணிகளாலும் கோல் எதனையும் போடமுடியவில்லை.

இடைவேளையின்பின்னர் 15 ஆவது நிமிடத்தில் சென். மேரிஸ் அணியின் கோல் காப்பாளரில்பட்டு வெளிவந்த பந்தை கோலாக்கத் தவறிவிட்டனர். மேலும் விறுவிறுப்பாக ஆட்டம் தொடர்ந்தபோது, 32 ஆவது நிமிடத்தில் சென். அன்ரனிஸ் வீரர் பிக்கெலஸ் மிக அற்புதமான ஒரு கோலை அடித்தார்.

அதன் பின்னர் விளையாட்டு முரண்பாட்டுத் தன்மையுடைய போக்கில் போய்விட்டது. இதன் விளைவாக 33 ஆவது நிமிடத்தில் சென். மேரிஸ் அணி வீரர் ஒருவருக்கு மஞ்சள் அட்டையும், அதைத் தொடர்ந்து 34 ஆவது நிமிடத்தில் அதே அணிவீரர் ஒருவருக்கு சிவப்பு அட்டையும், அதே நிமிடத்தில் சென் அன்ரனிஸ், சென் மேரிஸ் இரு அணிவீரர்களுக்கும் மஞ்சள் அட்டையும் காட்டப்பட்டதால், ஆட்டமுடிவின்போது சென். அன்ரனிஸ் அணி சென்மேரிஸ் அணியை 1:0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து இறுதியாட்டத்திற்குத் தெரிவாகியது.

(12)

# தீவகத்தில் சிறப்பாக நடைபெற்ற மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

தம்பாட்டிக் கிராமம், தேசிய எழுச்சிப் பேரவை, கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் என்பன இணைந்து மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வை நேற்றுமுன்தினம் தம்பாட்டிக் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடாத்தியது.

இந்த நிகழ்வு - தம்பாட்டி தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சிவச்செல்வன் தலைமையில் நடைபெற்றது.

பொதுச்சுடரை செயலாளர் ஜெயசிறி, ச.குணசீலன், இணைப்பாளர் ச.ஜெயக்குமார் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தேசியக் கொடியை ஊர் காவற்துறைப் பிரதேசப் பொறுப்பாளர் ரதன் ஏற்றிவைத்தார். ஈகச் சுடரை மாவீரர் பெற்றோர் ஏற்றி வைத்தனர்.

மாவீரர் பெற்றோர் கௌரவிக்கப்பட்டு, மதிய போசனம் வழங்கி உபசரிக்கப்பட்டனர்.

மாவீரர் நினைவுரையை கனகலிங்கம், செம்மணன், ஜெயக்குமார் ஆற்றினர். இறுதியில் இசை நிகழ்வு நடைபெற்றது. போராளிகள், பொது மக்கள் எனப் பலரும் பங்குபற்றிச் சிறப்பித்தனர்.

வேலணை ப.நோ.கூ.சங்கத்தின் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு நேற்றுக்காலை 10 மணியளவில் இந்தச் சங்கத் தலைவர் நல்லைநாதன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

அத்துடன் மாவீரர் பெற்றோர் சுடரை ஏற்றி, மலர் வணக்கம் செலுத்தினர். பொதுச சுடரை கூட்டுறவுப் பொறுப்பாளர் புஸ்பன் ஏற்றி வைத்தார்.

மாவீரர் பெற்றோருக்கு நினைவுப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

சிறப்புரைகளை தேசிய எழுச்சிப் பேரவை ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம், வேலணைப் பிரதேச அரசியறதுறைப் பொறுப்பாளர் யாழ்.நம்பி, துணைப் பொறுப்பாளர் சி.செம்மணன் ஆகியோர் நிகழ்த்தினர். இந்த நிகழ்வு விசேடமாக அலங்கரிக்கப்பட்ட மணடபத்தில் நடைபெற்றது. போராளிகளும், பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூ.சங்க எல்லைப் பரப்புக்குட்பட்ட மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வொன்றை இந்தச் சங்கம் நேற்று முன்தினம் மாலை 3 மணிக்கு நடாத்தியது. சங்கத் தலைவர் ப.கனகலிங்கம் தலைமையில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நடைபெற்றது. மாவீரர்களுக்கான ஈகச்சுடரை அந்தந்த மாவீரர் பெற்றோர், உரித்துடையோர் ஏற்றி வைத்தனர்.

40 இற்கும் மேற்பட்ட மாவீரர் குடும்பங்கள் கௌரவிக்கப்பட்டன. இவர்களுக்கான நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது.

நிகழ்வின் பொதுச்சுடரை புங்குடுதீவு பிரதேச அரசியறதுறைப் பொறுப்பாளர் இசைச்செல்வன் ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார்.

மாவீரர்கள் நினைவாகப் பாடசாலை மாணவர் மத்தியில் நடாத்தப்பட்ட வினாடி - வினாப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

புங்குடுதீவு தியாகி திலீபன் மருததுவமனைப் பொறுப்பாளர் டொக்டர் வண்ணன், கணேசா மகாவித்தியாலய அதிபர் எஸ்.கே.சண்முகலிங்கம், புங்குடுதீவுப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் விநாயகமூர்த்தி ஆகியோர் மாவீரர் பெற்றோரை வாழ்த்தி உரை நிகழ்த்தினர்.

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் பொலிஸாரால் கைது

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த இருவர் கோப்பாய் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

பொது மக்கள் கொடுத்த தவலையடுத்து உரும்பிராய் கிழக்கு பாரதிதாஸன் வீதியிலுள்ள ஒரு வீட்டில் மண்ணுக்குள் புதைத்து வைக்கப்பட்டிருந்த 2 பரல்கோடா, கசிப்பு மற்றும் உற்பத்திப் பொருட்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டன.

உரும்பிராய் மேற்கு அன்னங்கைப் பகுதியில் ஒரு வீட்டின் சமையல் கட்டிலிருந்து கசிப்பு உற்பத்தி நடைபெற்றபோது, 64 லீற்றர் கசிப்பு, 300 கிராம் கோடா மற்றும் உபகரணப் பொருட்கள் என்பனவும் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சைக்கிள் திருத்தும் கடையில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

அரியாலை கனகரட்ணம் வீதியில் உள்ள சையிக்கிள் திருத்தும் கடையொன்றில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இரு சைக்கிள்கள் திருடப்பட்டன.

சைக்கிள் திருத்துவதற்காக இந்தக் கடையில் கொடுக்கப்பட்ட சைக்கிள்களே திருடர்களால் திருடிச் செல்லப்பட்டன.

## மீன்பிடி வள்ளங்கள் அன்பளிப்பு

பொன்னாலை, தொல்புரம் மேற்கு ஆகிய இரு கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்து - தலா ஒவ்வொரு வறிய கடற்தொழிலாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு இரண்டு மீன்பிடி வள்ளங்கள் வழங்கப்படவுள்ளன.

குறிப்பிட்ட மீன்பிடி வள்ளங்கள் வழங்கும் நிகழ்வு - தொல்புரம் மேற்கு கிராம அலுவலகத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் மூவிமொண்டோ நிறுவனப் பிரதிநிதிகள், தொல்புரம் மேற்கு கிராம அலுவலர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (207)

## மிதிவெடி அகற்றும் பணியாளர் காயம்

(ஏழாலை)

ஏழாலை குப்பிளான் பகுதியில் மிதிவெடியில் சிக்கி, டெனிஸ் மிதிவெடியகற்றும் பிரிவின் பணியாளர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இந்த விபத்தில், டெனிஸ் மிதிவெடியகற்றும் பிரிவின் பணியாளரான அப்புத்துரை தயாகரன் (வயது - 24) என்பவரே படுகாயமடைந்தவராவர்.

தலையிலும், நெஞ்சுப்பகுதியலும் படுகாயமடைந்த் இவர் -யாழ. போதனாவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (20)

# தலைவரின் பிறந்ததினத்தை முன்னிட்டு மாணவருக்கு சைக்கிள்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையால், தமிழீழ தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்த தினத்தையும், மாவீரர்நாளையும் முன்னிட்டு- இந்த வருடம் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வறிய மாணவர்கள் சிலருக்கு, முதற்கட்டமாகத் துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் வைபவமும், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையால் நடாத்தப்பட்ட விவாத அரங்கின் இறுதிப் போட்டியும் நேற்று முன்தினம் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் பகிரதன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாகப் பொதுச்சுடரை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ், பொருளியல் துறைப் பேராசிரியர் சிவநாதன், யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் சிவச்சந்திரன், பேராசிரியர் சண்முகலிங்கம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.


முதல் மாவீரரின் திருவுருவப் படத்துக்கான ஈகச்சுடரையும், மலர் மாலையையும் தேசிய எழுச்சிப் பேரவை ஊடகப் பேச்சாளர் கனகலிங்கம் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து சிறப்புரைகளை யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ், யாழ்.மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன் ஆகியோர் நிகழ்த்தினர்.

பட்டிமன்றத்தில் முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்ட யாழ். பல்கலைக்கழக அணிக்கு பரிசில் வழங்கும் நிகழ்வும், 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைகளில் சித்தியடைந்த 5 மாணவர்கள் தெரிவு செய்து, துவிச்சக்கர வண்டி வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் தேசியத் தலைவரின் உள்ளத்து சிந்தனைகள் அடங்கிய நூல் ஒன்றும், மாவீரர்களின் கவிதைகளைச் சுமந்த ஒலிநாடா ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டன.




நேற்றுமுன்தினம் தமிழீழ மாணவர் பேரவையில் நடைபெற்ற தேசியத் தலைவரின் பிறந்ததின பரிசில் வழங்கும் நிகழ்வில் பேராசிரியர் மோகனதாஸ், யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஆகியோர் பரிசில்கள் வழங்குவதைப் படங்களில் காணலாம்.

## கொடிவாரம்

சாவகச்சேரி வைத்தியசாலையின் கொடிவாரம் - கடந்த வாரம் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் ஆரம்பமானது. அன்றைய தினம் இடம்பெற்ற கொடிவார நிகழ்வை நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் ஆரம்பித்து வைத்தார்.(29)

## முன்பள்ளிகளுக்கு நிதியுதவி

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள பத்து சனசமூக நிலையப் பாலர் பாடசாலைகளுக்கென, யாழ். மாவட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களால் சுமார் 8 லட்சம் ரூபா வரையில் யாழ்.மாவட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் இயங்கி வரும் பாலர் பாடசாலைகளின் முன்னேற்றத்துக்கு, இந்த நிதியுதவி பெரிதும் பயனளிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (14)

# தலைவரின் பிறந்ததினத்தை முன்னிட்டு முன்பள்ளி சிறுவர்களுக்கு வங்கிக் கணக்குகள்

தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு, தென்மராட்சிப் பிரதேசம் மூன்று கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு கோட்டத்திலுமுள்ள முன்பள்ளிகளில் இருந்து 50 சிறுவர்கள் வறுமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு புத்தகங்கள் வழங்கப்படவுள்ளன.

தென்மராட்சியில் கைதடி கோட்டத்துக்கான நிகழ்வு - பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்திலும், சாவகச்சேரி கோட்டத்துககான நிகழவு - சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், கொடிகாமம் கோட்டத்துககான நிகழ்வு - கொடிகாமப் பிரதேசசபை மண்டபத்திலும் எதிர் வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தென்மராட்சியில் 150 முன்பள்ளி சிறுவர்களுக்கு ரூபா 500 வீதம் வங்கியிலிட்டு, வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு புத்தகங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வுகளை தென்மராட்சி எழுச்சிப் பேரவையினரும், மாவீரர் நாள் செயற்பாட்டுக் குழுவினரும் இணைந்து மேற்கொள்ளவுள்ளனர்

மேலும் தென்மராட்சியில் வறுமை நிலையிலுள்ள 15 மாவீரர் குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு, அவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வழங்கும் நிகழ்வும் அன்றையதினம் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (25)

## அழிவடைந்த வீடுகள் புனரமைப்பு

தொல்புரம் மேற்குப் பகுதியில், பகுதி நிலையில் அழிவடைந்த 13 வீடுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஹரித்தாஸ் பிரான்ஸ் நிறுவனத்தால் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இந்த வீடுகள் புனரமைப்புச் செய்வதற்கான விண்ணப்பம் பயனாளிகளிடமிருந்து தொல்புரம் மேற்கு கிராம அலுவலர் ஊடாகப் பெறப்பட்டு வருகிறது.

அதேவேளை, நிறுவனத்தால் இந்தப் பிரதேசத்தில் ஓர் பொது நோக்கு மண்டபம் ஒன்று கட்டிப் பூர்த்தியாக்கப்பட்டு, அதற்கான திறப்பு விழாவும் அண்மையில் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (207)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

நாலாவது அகவையில்



பெயர் : லோ. தவசிகா
முகவரி : ஆனைக்கோட்டை.

ஏழாவது அகவையில்



பெயர் : தே.கார்த்தீபன்
முகவரி : கரவெட்டி.

ஏழாவது அகவையில்



பெயர் : வி.விஷ்ணுகாந்தன்
முகவரி : யாழ்ப்பாணம்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :------------------------------

முகவரி :------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------------
பெற்றோர் ஒப்பம்







# புகைத்தலுக்குத் தடை



இங்கிலாந்தில் புகை பிடிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதால், அந்த எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலையில் அந்தநாட்டு அரசாங்கம் உள்ளது. அத்துடன் சிற்றுண்டிச்சாலை மற்றும் ஹோட்டல்களில் புகைபிடித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. சில மதுபான சாலைகளிலும் புகைபிடித்தல் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது. அதாவது மதுபான சாலைகளில் சிகரெட்டுக்குப் பதிலாக, சில ருசியான உணவுகளைப் பரிமாறுகிறார்கள். இத்தகைய திட்டங்களின் மூலம் அடுத்த ஐந்து வருடங்களில் ஏறக்குறைய 5 மில்லியன் மக்களைப் புகைபிடித்தலில் இருந்து முற்றாக விடுவிக்கவேண்டும் என்னும் முயற்சியில் அரசாங்கம் குறியாகவுள்ளது. 2008 ஆம் ஆண்டு வரை புகைபிடித்தலுக்கான லைசன்ஸ் வழங்குவதும் நிறுத்தப்பட்டுள்ளது. பிரித்தானிய மருத்துவக் கழகம் அற்கோலை ஓரளவு ஆதரித்தும், புகைபிடித்தலை முற்றாக எதிர்த்தும் அறிக்கைகளை விடுத்துக் கொண்டுள்ளது. இதனுடைய உடனடித் திட்டம் புகை பிடித்தலை முற்றாக நிறுத்துவதல்ல. காலப்போக்கில் மக்களாகவே அதனின்றும் விலகவேண்டும் என்பதுதான். இங்கிலாந்து முழுவதிலும் மக்கள் கூடும் இடங்களிலெல்லாம் புகை மண்டலமாகக் காட்சியளிக்கிறது. ஆனால் அங்கே புகைத்தலைத் தடைசெய்யும் வாசகங்கள் காணப்படுகின்றன. ஆனாலும் அங்கே புகைத்தல் குறைந்தபாடில்லை.

# குழப்பும் மருந்துகள்



ஒரே மாதிரியான குளிகைகள் இப்பொழுது வருவதால், அவற்றை வேறுபடுத்திப் பார்ப்பது மிகக் கடினமாக இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். இதன் காரணமாக மக்கள் ஒரே மாதிரியான குளிகைகளை வித்தியாசம் தெரியாமல் பயன்படுத்தி, பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க வேண்டிய கட்டம் ஏற்படுகிறது. டேர்வி பல்கலைக்கழகத்தில் லிசெய்யப்பட்ட ஆராய்ச்சியின்படி, உலக மருத்துவ தேவையைப் பூர்த்தி செய்கின்ற 50 வீதமான குளிகைகள் வெள்ளை நிறமானவையாகவே இருக்கின்றன. அவற்றின் அளவில் ஒத்ததாகவும் குளிகைகள் வருகின்றன. ஆகவே மருந்துவ நிலையங்களிலும் இத்தகைய நிலை ஏற்படுகிறது. தனியார் மருத்துவ நிலையங்கள் மற்றும் பாமசிகள் சிலவேளைகளில் வில்லைகளை விநியோகிக்கும்போது, பலதரப்பட்ட சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். பொதுவாகப் பரசிற்றமோல் வர்க்க வில்லைகள் மட்டுமே வெண்ணிறமானவை.


ஆனால் சில நோய் எதிர்ப்பு மருந்துகள்கூட, வெண்ணிறமானவையாகக் காணப்படுகின்றன. இதன் காரணமாக சாதாரண பனடோல் என நினைத்து, மக்கள் சில பாரதூரமான நோய் எதிர்ப்பு மருந்துகளைப் பாவிக்கிறார்கள். இது அவர்களின் உயிருக்கும் ஆபத்தாக முடிகிறது. பாவனையாளர்கள் மருந்துகள்ளைப் பாவிக்கும்போது, எவ்வாறு அவற்றை அடையாளம் காணவேண்டும் என ஐரோப்பிய நாடுகளில் ஒரு குறிப்புப் புத்தகம் வழங்கப்பட்டிருக்கிறது.

# சரியும் இமயம்



இந்தியாவிலுள்ள இமயமலை உச்சியில் வித்தியாசமான கால நிலை மாற்றங்கள் ஏற்படுவதால், அங்கே புதிய வகையான நிலை தோன்றியுள்ளது. அதாவது சில இடங்களில் பனிக்கட்டிகள் இல்லாமலும், மேலும் சில இடங்களில் அதிகளவு பனிமலைகளும் காணப்படுவதாகக் கூறப்படுகிறது. உலகில் ஏற்பட்டிருக்கின்ற சடுதியான வெப்பநிலை அதிகரிப்புத்தான் இதற்கான காரணம் எனக் காலநிலை ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் யுனெஸ்கோ நிறுவனம் இந்த ஆய்வுகளில் தற்பொழுது ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. இதன் மூலம் உலகின் மிக உயர்ந்த மலையுச்சியைக் கொண்ட இமயமலை – காலநிலை மாற்றத்தால் அழிந்து போகக்கூடிய நிலையிலிருந்து பாதுகாக்க முடியும் என்று, யுனெஸ்கோ செய்திக்குறிப்பு கூறுகிறது. அமைதியானதும் சுத்தமான காற்றையும் கொண்ட இமயமலைச் சூழல் தற்பொழுது காபனீரொட்சைட் வாயுவின் செறிவை அதிகளவு கொண்டதாக உள்ளது. இது உல்லாசப் பிரயாணிகள் பலருடைய மனதில் மிகவும் சங்கடத்தை உண்டு பண்ணியுள்ளது. ஏனெனில், அவர்கள் வருடா வருடம் இங்கே வருவதுதான். உண்மையில் உலகத்தின் ஒரு சிறந்த பொக்கிசமாக இது திகழ்கிறது. இது அழிந்துவிடுமோ என ஆராய்ச்சியாளர்கள் மற்றும் நேபாளத்தின் அரசாங்கப் பிரதிநிதிகள் மிகவும் கவலைப்படுகிறார்கள். இதேவேளை இமயமலைக்குச் செல்வோரின் எண்ணிக்கையும் மட்டுப்படுத்தப்பட்டு வருகிறது.

# கார் பந்தயம்



உலகின் முன்னணி கார்கம்பனியாகிய ரொயாட்டா நிறுவனம் – 2005 ஆம் ஆண்டு மொடலாகப் பிரியஸ் என்ற காரைச் சந்தைக்கு விடவுள்ளது. இது பெற்றோல் மூலம் இயங்கக்கூடயதாகக் காணப்படுகிறது. அத்துடன் ஹைபிறைட் சக்தியும் இங்கே காணப்படுகிறது. பெற்றோல் முடிந்தாலும், அங்கே காணப்படுகின்ற பற்றரி மூலம் இந்தத் தொழில்நுட்பத்திறன் கொண்ட கார்கள் – குறிப்பிட்ட தூரம்வரை ஓடக்கூடியவை. கடந்தவருடம் இந்தவகையான கார்கள் குறைந்தளவு தொழில்நுட்பத் திறத்துடன் ஐரோப்பிய நாடுகளில் விற்கப்பட்டன. ஏறக்குறைய 8500 கார்கள்வரை இந்த வருடம் மட்டும் விற்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. உலகம் முழுவதும் கடந்தவருடம் 43000 ஹைபிறைட் கார்கள் விற்கப்பட்டன. தற்போது செய்யப்பட்டிருக்கின்ற நுட்பங்களை உற்றுநோக்கும்பொழுது, ஏறக்குறைய 130,000 கார்கள் வரை விற்பனை செய்யக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகைய ஹைபிறைட் தொழில்நுட்பத் திறன்களைக் கொண்டு, கார்களை உற்பத்தி செய்யும் முயற்சியில் நிசான் மற்றும் போட் கம்பனிகள் இறங்கியுள்ளன. ஆனால், இதனுடைய சிக்கல் நிறைந்த தொழில்நுட்பத்தைக்கண்டு போட் கம்பனி பின்வாங்கியுள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன. ஆனால் நிசான் கம்பனி ரொயாட்டாவுக்குப் போட்டியாக உற்பத்தி முயற்சிகளில் இறங்கியுள்ளன.

# நல்ல உடற்பயிற்சி



பாரிசவாத நோயாளிகளுக்கு சைக்கிள் ஓடுவது நல்லதேகப் பயிற்சியென வைத்திய நிபுணர்களால் அடித்துக் கூறப்படுகிறது. அவர்களுடைய முள்ளந்தண்டுகள் இதன் காரணமாக நல்ல பயிற்சியைப் பெறுமெனக் குறிப்பிடப்படுகிறது. தற்போது ஐரோப்பிய நாடுகளில் பாரிசவாத நோயாளர்களுக்குரிய சைக்கிள்கள் விற்பனையாகின்றன. இவை எலும்புகளுக்கு மட்டுமல்ல, தசைகளுக்கும் நல்ல பயிற்சியை வழங்கும் எனக் கூறப்படுகிறது. அண்மையில் 40 வயதான ஒரு பாரிசவாத நோயாளர் சைக்கிள் உடற்பயிற்சியின் பின்னர், தற்போது ஓரளவுக்கு எழுந்து நடக்கக்கூடிய தன்மையைப் பெற்றிருக்கிறார். முள்ளந்தண்டு எலும்புகள் சைக்கிள் உடற்பயிற்சி மூலம் ஒருவகையான மின் சக்தியைப் பெறுகின்றன எனவும், அதுவே இயங்காமல் இருக்கின்ற எலும்பு மற்றும் தசைகளை இயக்குகின்றது எனவும் மருத்துவவியலாளர்கள் கூறுகிறார்கள். இதேவேளை முள்ளந்தண்டு எலும்பு சம்பந்தமான பிரச்சினை உள்ளவர்களுக்கு நீச்சலின்போது, அணியக்கூடிய ஒருவித சேட் வகையான அணிகலன் ஒன்றை ஐரோப்பிய நாடுகளின் சுகாதார நிறுவனம் கண்டுபிடித்துள்ளது. இது மிகவும் சிறந்த உடற்பயிற்சியை முள்ளந்தண்டுக்கு வழங்குகிறது. நோயாளிகள் இந்தக் கருவியை அணிந்துகொண்டு, நீச்சல் செய்யும்போது அவர்களுடைய முள்ளந்தண்டுகள் சரியான முறையில் அசையக்கூடியதாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

# இத்தாலிக்கு நெருக்கடி



ஆரம்பத்தில் கையடக்கத் தொலைபேசியை வெறுத்த இத்தாலிய நாட்டுமக்கள் இப்பொழுது 1:3 என்ற விகிதத்தில் கையடக்கத் தொலைபேசியைப் பாவிக்கத் தொடங்கியுள்ளனர். இத்தாலிய நாட்டு அரசாங்கம்கூட கையடக்கத் தொலைபேசிப் பாவனையை முதலில் தடுத்தது. ஆனால், மக்களுடைய பாவனையைக் கண்டு தங்களின் மனதை மாற்றவேண்டிய நிலைக்கு அரசியல்வாதிகள் தள்ளப்பட்டுள்ளனர். அங்கே வாழும் மக்களின் எண்ணிக்கைக்கு மேலாகத் தொலைபேசிகளின் எண்ணிக்கை சென்றிருப்பதாகக் கூறப்படுகிறது. கடந்த வருடத்தில் மட்டும் ஏறக்குறைய 27 பில்லியன் தகவல்கள் – இத்தாலிய நாட்டு மக்களின் கையடக்கத் தொலைபேசிகளில் இருந்து பரிமாறப்பட்டுள்ளன. அதைவிடத் தற்பொழுது ஒவ்வொரு செக்கனிலும் ஏறக்குறைய 10 ஆயிரம் செய்திகள் இத்தாலிய நாட்டுக் கையடக்கத் தொலைபேசிகளின் ஊடாகப் பரிமாறப்படுகின்றன. இத்தாலியர்கள் ஒவ்வொரு தகவலுக்கும் வற்வரியைச் செலுத்துகிறார்கள். வற்வரி அதிகரித்தாலும் அவர்களின் கையடக்கத் தொலைபேசிகளின் பாவனை குறையமாட்டாது எனக் கூறப்படுகிறது. அண்மையில் செய்யப்பட்ட ஆய்வுகளின்படி, இத்தாலி நாட்டுப் பருவவயதினர் ஒவ்வொருவரின் கைகளிலும் கையடக்கத் தொலைபேசிகள் காணப்படுகின்றன. இதன் காரணமாகத்தான் இந்தப் பாவனையைக் கட்டுப்படுத்தமுடியாதுள்ளது.

## திரை விமர்சனம்

# அட்டகாசம்



அஜித்துடன் சேர்ந்து அமர்க்களம் என்ற படத்தை இயக்கிய இயக்குநர் சரண் - அஜித்துடன் இந்தப் படத்தில் மீண்டும் இணைந்திருக்கிறார். இரண்டு வேடத்தில் அஜித் படத்தில் வருகின்றார். அஜித் தனது தாய் சுஜாதாவுடன் சேர்ந்து ஒரு டிரைவிங் ஸ்கூல் நடத்தி வருகின்றார். பாபு அன்ரனி அஜித்துடைய இடத்தைப் பிடிக்க வருகின்றார். அப்போது அஜித்துடைய தந்தை நிழல்கள் ரவியைக் கொன்றது பாபு அன்ரனிதான் என்பதும், இந்தக் கொலையை நேரில் பார்த்த அஜித் - வெளிநாட்டில் இருப்பதாகவும், இங்கேயுள்ள அஜித் இல்லை எனவும் கூறி, பாபு அன்ரனியைச் சமாதானப்படுத்துகின்றார் சுஜாதா.

இதேவேளை - பூஜாவுக்கும், அஜித்துக்கும் காதல் ஏற்படுகிறது. ஒரு கட்டத்தில் தூத்துக்குடியில் அஜித்துக்குப் பெரியதாதாவுக்குரிய மதிப்பும், மரியாதையும் கிடைக்கிறது.

ஆனால், தாதா அஜித் - மற்ற அஜித்தை அடையாளம்கண்டு தனது தாய் சுஜாதாவைப் பழிவாங்கச் சென்னை வருகிறார். அங்கு அவர் பழைய கதைகளை அறிந்து, இரண்டு அஜித்களும் சேர்ந்து வில்லன் தூத்துக்குடி மகாதேவன் மற்றும் பாபு அன்ரனி ஆகியோரை அழிப்பது மீதிக்கதை. இரட்டைவேடம் என்றாலே அஜித்துக்குக் கொண்டாட்டம்தான்.

அப்பாவி மற்றும் தாதா பாத்திரங்களைச் சிறப்பாகவே செய்திருக்கின்றார் அஜித். கருணாஸ் - அஜித் ஜோடி நகைச்சுவையில் வெளுத்துவாங்கியிருக்கிறது. போதாக் குறைக்கு மற்ற அஜித்துக்கு ரமேஷ்கண்ணா ஜோடி. பூஜா இளமையுடன் நடித்திருக்கிறார். மகாதேவன் + பாபு அன்ரனி கனமில்லாத வில்லன்கள். பொறிபறக்கும் சண்டைப் பயிற்சி சுப்பர் சுப்பராயன். ஒளிப்பதிவாளர் ஏ.வெங்கடேஷ். பாடல்கள் வைரமுத்து. பரத்வாஜின் இசையில் பாடல்கள் எல்லாமே நன்றாக உள்ளன. - அட்டகாசம் - அஜித்மயம். - ஜெயா.

# புதிய தரைத்தோற்ற அம்சங்கள்




ஐரோப்பாவில் காணப்படுகின்ற சிறப்பான தரைத்தோற்ற அம்சங்கள் தரைத்தோற்றவியலாளரின் கண் களில் தட்டுப்பட்டுள்ளன. இது பார்ப் பவர்களின் கண்களைக் குளிரவைக்கக்கூடிய முறையில் காணப்படுகிறது. குறிப்பாக இங்கே காணப்படுகின்ற குளம், குட்டைகள் சுத்தமானதாகவும், அழகியனவாகவும் உள்ளன. இதைவிடக் காடுகள் மற்றும் பறவையினங்கள் ஆகியனவும் பார்ப்பவர்களின் கண்களைக் கவரக்கூடியனவாகவும் உள்ளன.

இதனை ஆய்வு செய்கின்ற குழுவின் கருத்துப்படி, ஏறக்குறைய 3000 பறவையினங்கள்கூட மறைந்து வாழுவதாகக் கூறப்படுகிறது. இத்தகைய இடங்களுக்குச் சென்ற ஆராய்ச்சியாளர்கள் கால்நடையாக அல்லது மோட்டார் சைக்கிளின் மூலம் பயணம் செய்துள்ளனர். ஏனெனில் அங்கே வாகனங்கள் செல்லமுடியாத அளவுக்குப் பாறைகள் மற்றும் மலைத் தொடர்கள் காணப்படுகின்றன. இவற்றுள் மிக முக்கியமானது - இத்தகைய பிரதேசங்கள் சிலவற்றுக்கு அருகில் நிலக்கரிச் சுரங்கம் காணப்படுவதாகவும், இத்தகைய இயற்கை வளங்கள் இவ்வளவு நாளும் கவனிப்பாரற்றுக் கிடந்தமை ஓர் துரதிஷ்டவசம் என ஆய்வு செய்யும் குழுவினர் தெரிவிக்கின்றனர். இந்தக் குழுவினர் யாவரும் நவீன உணர் திறன்மிக்க கருவிகளுடன் காணப்படுகின்றனர். உள்ளூரிலே காணப்படுகின்ற இத்தகைய தரைத்தோற்ற அம்சங்களின் ஆராய்ச்சியென்பது, ஒரு மிக முக்கியமானதெனக் குறிப்பிடப் படுகிறது.


# மாறிவரும் உணவு உலகம்

பழங்கள் மற்றும் மரக்கறிகளை விரும்புபவர்கள் பல நோய்களிலிருந்து தப்புவது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அவர்கள் பல தரப்பட்ட சத்துக்களை இழப்பதை ஒருவரும் அறிவதில்லை. இதைப்பற்றி ஆராய்ந்த அமெரிக்க விஞ்ஞானிகள் - ஏறக்குறைய 37 சந்தை வியாபாரிகளைப் பேட்டி கண்டபோது, அவர்கள் தங்களின் வாடிக்கையாளர்களைப் பற்றி பல கருத்துக்களை வெளியிட் டுள்ளனர். அவற்றில் மரக்கறி கள் மற்றும் புழுங்கள் வாங்கு பவர்கள் கூடுதலாக இருப்பதா கவும், புழுங்களையே மக்கள் அதிகம் விரும்புவதாகவும் சொல் கிறார்கள். இதற்கான காரண மாக - புழுங்களை சமைக் காமலே சாப்பிடலாம் என்பது தான். ஐரோப்பாவிலும் தற் போது புழுங்கள் உண்போரின் எண்ணிக்கை அதிகரித்துள் ளது. பெரும்பாலானவர்கள் மரக்கறி வகைகளை சாப்பாட் டின்போது குறைக்கிறார்கள். உலக சுகாதார ஸ்தாபனத்தின் கருத்துப்படி, மக்கள் மாமிசம் கலந்த உணவுகளையும் சாப்பிடத்தான் வேண்டும் என்று கூறப்படுகிறது. இதைவிட ஒரு சில நாடுகளில் மாமிசம், மரக்கறி ,புழுங்கள் இவற்றையெல்லாம் மிஞ்சி மக்கள் இனிப்புப் பண்டங்களுக்குத் தங்களின் உணவு வகைகளை மாற்றுகிறார்கள். இதன் மூலம் அவர்கள் நோய்களைச் சம்பாதித்துக் கொள்கிறார்கள். ஆனாலும் புற்றுநோய் போன்றவற்றுக்கு உணவு வகைகளாக மரக்கறிகள், புழுங்களே சிபாரிசு செய்யப்படுகின்றன.




# கண்ணைப் பாதுகாக்கும் கணினி

கண் சத்திர சிகிச்சைகள் நமது நாட்டைப் பொறுத்தவரையில் பெரிதாக வெற்றியளிப்பதில்லை. எத்தனையோ பேர் தம்முடைய கண்களை சத்திரசிகிச்சை மூலம் இழந்தவர்களாக இருக்கிறார்கள். ஆனால், மேல் நாடுகளில் கண் சத்திர சிகிச்சைகள் கூடுதலாக கணினி மூலமே குணமாக்க முடியாது என்று கூறப்பட்டன. ஆனால், அவற்றை எல்லாம் மிஞ்சக் கூடிய வகையில் தற்போது கணினி மூலம் சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது ஜப்பான் நாட்டில் இந்த நவீன வசதிகள் கொண்ட கணினிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. எத்தனையோ வசதிகளுக்கு கணினிகள் பயன்படுத்தப்பட்டு வந்தாலும், கண் நோய்களுக்கு இவை பயன்படுவது மிகவும் ஒரு சிறப்பு என வைத்திய நிபுணர்கள் கருத்து வெளியிட்டிருக்கின்றார்கள். இதே வேளை தூரப்பார்வை, குறும்பார்வைக் குறைபாடுகளுக்கும் கணினியே சிறப்பான கண்ணாடிகளைச் சிபாரிசு செய்கின்றன. மக்கள் - வைத்தியர்களிலும் பார்க்க கணினிகளையே அதிகம் நம்புகிறார்கள். குளோகோமியா கண் நோயால் ஏறக்குறைய 500, 000 பேர் பாதிப்படைந்து இருக்கிறார்கள் ஐரோப்பாவில் மட்டும். அவர்களை வைத்தியர்கள் அப்படியே கைவிட்டிருந் தார்கள். தற்போது அவர்களது நோய் கணினிகளால் குணமாக்கப்பட்டிருக்கிறது.



# அழிந்துவரும் அரிய மிருகங்கள்

உலகிலேயே காணப்படுகின்ற கடல்வாழ் உயிரினங்களும், தாவரங்களும் அதைவிட சிறப்பாகக் காணப்படுகின்ற ஊர்வன என்பவற்றையும் கணக்கெடுக்கப்பட்டபோது, அவற்றினுடைய எண்ணிக்கை கிட்டத்தட்ட 15,589 ஆக இருக்கிறது. கடலுக்கடியில் காணப் படுகின்ற அழகிய மீனினங்கள் மற்றும் பவ ளப் பாறைகள் ஆகி யன மிகவும் அற்புத மாகக் காணப்படு கின்றன. அத்துடன் இவற்றினுடைய அழிவுகளும் கணக்கெடுக்கப்பட்டுள்ளன. கூடுதலாக ஊர்வன மனிதர்களால் தொடர்ச்சியாக அழிக் கப்பட்டு வருவதா கக் கூறப்படுகிறது. இதேவேளை உல கின் மிகப் பழைய மிருகங்களில் ஒன் றாகிய டைனோசருடைய படிவுகள் கண்டெடுக்கப்பட் டுள்ளன. இதன் மூலம் உலகினுடைய மிருகங்களின் எண்ணிக்கை எவ்வளவு தூரம் தற்போது குறைந்துள்ளது. அதைவிட இவற்றின் எண்ணிக்கை எதிர்காலத்தில் எவ்வளவு குறைவு ஏற்படப்போகிறது என்பதை எல்லாம் பார்க்கக்கூடியதாக உள்ளது. இவற்றை எல்லாம்விட இன்னும் ஆராய்ச்சியாளர் களின் கண்களுக்குத் தெரியாத எத்தனையோ மிருகங்கள் காணப்படுகின்றன. இவை பெரும்பாலும் மனிதரால் காணப்படாமலேயே அழிவுக்குள்ளாகின்றன. ஏறக்குறைய 50% மளவில் ஆமைகள் மற்றும் பறவைகளினுடைய எண்ணிக்கை கூட குறைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.




# வீடியோ தொலைபேசி

கையடக்கத் தொலைபேசிகளில் கமராத் தொலைபேசி அண்மைக்காலமாக உலகத்தையே ஒரு கலக்கு கலக்கியது. ஆனால், தற்போது இவற்றையெல்லாம் மிஞ்சும் அளவுக்கு விற்பனையில் வீடியோ கையடக்கத் தொலைபேசிகள் சாதனை படைத்துக் கொண்டுள்ளது. மொபைல் வீடியோ மூலம் நேரடியாக கிரிக்கெட் போட்டிகளை மக்கள் பார்க்கக் கூடிய வசதி கிடைக்கக் கூடியதாக உள்ளது. இதன் மூலம் வீடியோ தொழில் நுட்பம் கையடக்கத் தொலைபேசிகளிலும் புகுந்திருக்கிறது. இதற்கு மெரு கூட்டும் விதமாக சிம்காட் கம்பனிகளும் அரிய வீடியோ வசதிகளைச் செய்து கொடுத்துள்ளது.



இதன் மூலம் ஈமெயில், இன்ரநெட் வசதிகள் கொண்ட கையடக்கத் தொலைபேசிப் பாவனையாளர்கள் நவீன கணினி ஒன்றை உள்ளங்கைக்குள்ளே வைத்திருக்க முடியும் என, தொழில் நுட்பவியலாளர்கள் கருதுகிறார்கள். சில வேளைகளில் இந்தக் கையடக்கத் தொலைபேசிகளில் காணப்படக்கூடிய எஸ்.எம். எஸ் தகவல்கள் கூட, மல்ரிமீடியா அமைப்பின் ஊடாக அனுப்பப்பட முடியும் எனவும் கூறப்படுகிறது.

ஆனால், இந்த வீடியோ கையடக்கத் தொலைபேசிகள் மூலம், சில கம்பனிகளுக்கிடையே போட்டியும் உருவாக்கப்பட்டிருக்கிறது எனக் கூறப்படுகிறது. மூன்று ஜீ (3ஜீ) வொடாபோன் ஆகிய கம்பனிகளுக்கிடையே இத்தகைய போட்டி உருவாகியுள்ளது.



வன்னேரிக்குளத்துக்கும், ஜெயபுரத்துக்குமிடையிலுள்ள ஐந்து கண் மதகு பாலத்துக்கு மேலால் வெள்ளம் பாய்வதால், பயணிகள் மோட்டார் சைக்கிளை காவிச் செல்வதைப் படத்தில் காணலாம். படம் : நக்கீரன்

### கண்ணிவெடி, மதிவெடி அகற்றும் பணி

பளைப் பிரதேசத்தில் கத்தாப்பு மரத்தடித் தோட்டப் பகுதியில் - கண்ணிவெடிகள், மிதிவெடிகள் அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக ஏ-9 வீதிக்கு அண்மையிலுள்ள தென்னங்காணியைச் சுற்றவர நாடா கட்டப்பட்டுள்ளதுடன் - மிதிவெடி, கண்ணிவெடி அபாய அறிவிப்பு பலகைகளும் நாட்டப்பட்டுள்ளன. (21)

### திறக்கப்படாத ஆரம்ப சுகாதார நிலையம்

பூநகரி - கௌதாரிமுனை ஆரம்ப சுகாதார நிலையம் இதுவரை கட்டி முடிக்கப்படாமையால் திறக்கப்படவில்லை என மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிரதேச மக்கள் சுகாதார தேவையை 12 கிலோ மீற்றர் தூரம் சென்றே பெறுகின்றனர்.

இந்த சுகாதார நிலையத்தை திறந்து, வைத்திய சேவைக்கு உதவுமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# மாவீரர் தினத்தை முன்னிட்டு பொது மக்களால் சிரமதானம்

(தாளையடி)

மாவீரர் தினத்தை முன்னிட்டு வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் பல்வேறு சிரமதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் பிரதேசத்தின் வீதி ஓரங்களில் காணப்படும் பற்றைகள், செடிகள் என்பன பொது மக்களால் சிரமதானம்மூலம் துப்பரவு செய்யப்பட்டு வருகின்றன.

மருதங்கேணி - தாளையடி வீதி, மருதங்கேணி - செம்பியன்பற்று வீதி, மருதங்கேணி - ஆழியவளை வீதி போன்ற வீதியோரங்களே துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

இதேவேளை, இந்தப் பிரதேசப் பாடசாலை மாணவர்களால் வடமராட்சி கிழக்கு மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. (122)

# மின் ஒழுக்கால் பொருட்கள் நாசம்

(கிளிநொச்சி)

வட்டக்கச்சிப் பகுதியில் சூரிய மின்கலத்தில் ஏற்பட்ட மின் ஒழுக்கால் வீட்டிலுள்ள பெறுமதி வாய்ந்த பொருட்கள் எரிந்துள்ளன.

இந்தச் சம்பவம் - கடந்த வியாழக்கிழமை வட்டக்கச்சி சில்வா வீதியிலுள்ள யோகலிங்கம் லிங்கேஸ்வரன் (ரஞ்சன்) என்பவரின் வீட்டில் இடம்பெற்றது.

வீட்டில் யாரும் இல்லாதவேளை ஏற்பட்ட தீவிபத்தால், வீட்டின் ஒரு பகுதியும், பெறுமதி வாய்ந்த பொருட்களும் எரிந்து நாசமாகியுள்ளன.

இந்த வீதியால் சென்றவர்களும், அயலவர்களதும் முயற்சியால் தீ அணைக்கப்பட்டது. (9)

# கிளிநொச்சியில் ஊடக அறிவியல் கல்லூரிக்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமை அடிக்கல் நாட்டு விழா

கிளிநொச்சி அறிவியல் நகரில், தமிழ் ஊடக அறிவியற் கல்லூரிக்கான அடிக்கல் நாட்டுவிழா - எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஊடக அறிவியலை, தமிழ் பேசும் மக்களிடேயே பரவலாக அறிமுகப்படுத்தி, தமிழ் ஊடகத் துறையில் வளர்ச்சியையும், உயர் நியமத்தையும் கொண்டு வருவதே இந்தக் கல்லூரியின் முக்கிய நோக்கமாக அமையும் என, அதன் நிறுவுனர்கள் தெரிவித்தனர்.

இதன் மூலம் ஊடகத்துறையில் அனுபவமும், புலமையும் கொண்ட மூத்த பத்திரிகையாளர்கள், ஆர்வலர்கள் மற்றும் கல்விமான்கள் இணைந்து ஆரம்பித்திருக்கும் இந்த நிறுவனத்தில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபுணர்களின் சேவையும் பெறப்படவிருப்பதாகத் தெரிய வருகிறது.

விரிவான பாட விதானத்தையும், ஊடகத்துறையின் நவீன மயமாக்கல் பற்றிய செயல்முறை அமர்வுகளையும் கொண்ட முதலாவது கற்கைநெறி - ஜனவரி மாதம் தொடங்கவுள்ளது.

அடிக்கல் நாட்டும் நிகழ்வுக்கு நாட்டின் பல பாகங்களில் இருந்தும் ஊடகவியலாளர்கள் வருகை தந்து கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

**தமிழா தாயகப் பகுதிகள் எங்கும் பிரதேச ரீதியாக மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.**

வவுனியா - புதுக்குளம் பிரதேச மாவீரர்களது பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு - நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு புதுக்குளம் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

சிவன் கோவில் சந்தியிலிருந்து, பாடசாலை மண்டபம் வரை மாவீரர் பெற்றோர்கள் பாண்ட் வாத்திய இசை முழங்க அழைத்துவரப்பட்டனர்.

இந்த நிகழ்வு - வவுனியா மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் தர்மேந்திரா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரை வவுனியா மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் அலை ஏற்றிவைத்தார்.

தேசியக் கொடியை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து மாவீரர்களது திருவுருவப் படங்களுக்கு மலர்மாலை அணிவித்து, அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும், விடுதலைப் புலிகளின் பிரமுகர்களும் சிறப்பு உரையாற்றினர்.

இதில் இந்த மாவட்டத்தைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் உட்பட 500 இற்கும் மேற்பட்டோர் கௌரவிக்கப்பட்டனர். (03)

மன்னார் - நானாட்டான் பிரதேச மாவீரர் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, மன்னார் நானாட்டான் மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு இடம்பெற்றது.

இந்த நிகழ்வு - நானாட்டான் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் அருந்தவம் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை மன்னார் மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் இளவரசி ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை மன்னார் அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன் ஏற்றிவைத்தார்.

மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கான மலர்மாலையை கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் வதனனும், மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் வேங்கை ஆகியோர் ஏற்றிவைத்தனர். (201)

முல்லைத்தீவு மாவட்ட மாவீரர்களின் பெற்றோர் - நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் தளபதிகளில் ஒருவரான அமிர்தாப் பொன்னம்மான், கண்ணிவெடிப் பிரிவுத் தளபதிகளில் ஒருவரான அஸ்வினி, கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஆகியோர் கலந்து கொண்டு மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவித்தனர்.

# வன்னிப் பிரதேசத்தில் உள்ள துயிலும் இல்லங்கள் அலங்கரிப்பு

(துணுக்காய்)

வன்னிப் பிரதேசம் எங்கும் மாவீரர்நாளை முன்னிட்டு, மாவீரர் துயிலும் இல்லங்கள் அலங்கரிப்புப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை 9 மணி தொடக்கம் - நண்பகல் 12 மணிவரையும் கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்ல வளாகத்தை, அலங்கரிக்கும் பணியில் கிளிநொச்சிப் பிரதேச ஓட்டோ சங்கத்தினர் ஈடுபட்டனர்.

இதேபோன்று பாண்டியன்குளம், துணுக்காய் பிரதேசங்களில் காலை 9 மணியளவில் அலங்கரிப்புப் பணி இடம்பெற்றது.

பாலிநகர் மகாவித்தியாலய மாணவர்கள், குட்டிசிறி மோட்டார் படையணிப் போராளிகள் ஆகியோர் இணைந்து, வன்னி விளாங்குள மாவீரர் துயிலும் இல்லத்தின் அலங்கரிப்புப் பணியில் ஈடுபட்டனர்.

### விளையாட்டில் வெற்றிபெற்றோருக்கு பணப்பரிசு

மாவீரர்களது நினைவாக வவுனியா மாவட்டத்தில் நடத்தப்பட்டு வந்த விளையாட்டுப் போட்டிகளின் இறுதிநாள் நிகழ்வுகளும், பரிசளிப்பு விழாவும் நேற்று முன்தினம் வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டிகளில் வவுனியா மாவட்டக் கழகங்களும், பாடசாலை அணிகளும் கலந்துகொண்டன.

இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பணப்பரிசும், பெறுமதி வாய்ந்த பொருட்களும் வழங்கப்பட்டன. (03)

### இரணைமடு வான்கதவுகள் திறப்பு

(இரணைமடு)

கிளிநொச்சி இரணைமடு நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளன.

அண்மை நாட்களாகப் பெய்து வரும் கடும்மழை காரணமாக, இந்த நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 32 அடி 4 அங்குலமாக உயர்வடைந்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரணைமடு நீர்த்தேக்கத்தின் பத்துக் கதவுகளும் திறந்துவிடப்பட்டு, பகல் 11 மணிக்கு மேலும் இரு வான்கதவுகள் திறக்கப்பட்டு நீர் வெளியேற்றப்படுகிறது.

தமிழீழ காவல்துறையினரின் பாதுகாப்பு நடவடிக்கையுடன் இந்த வான்கதவு திறக்கப்பட்டன.

### 80 லட்சம் நிதி ஒதுக்கீடு

மன்னார் மாவட்டத்தில் அபிவிருத்திக்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவு திட்டத்தின் கீழ் 80 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் 2 கோடி 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில், மன்னார் மாவட்டத்தில் 98 அபிவிருத்தி திட்டங்களுக்காக 80 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# பூம்புகார் கிராமத்தில் புனரமைப்பு வேலைகள்

(வவுனியா)

வவுனியா பூம்புகார் கிராம மக்களின் தேவை கருதி, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - நிகொட் நிதியுதவியுடனும், உலக உணவுத் திட்டத்தின் உதவியுடனும் புனரமைப்பு வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

இந்த வேலைத்திட்டத்தில் 250 மீற்றர் தூரம் வீதியும், 6 மதகுகளும் புனரமைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேச மக்களின் அடிப்படைத் தேவையான மலசல கூடங்கள், கிணறுகள் ஆழமாக்கப்படுதல், கிணற்றுக்குப் பாதுகாப்பு பக்கச் சுவர்கள் அமைத்தல் போன்ற வேலைகள் இந்தக் கிராமத்தில் நடைபெற்று வருகின்றன.

இதனால் இந்தக் கிராம மக்கள் மிகுந்த நன்மையடைகின்றனர்.

இந்தக் கிராமத்தில் 130 இற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறமை குறிப்பிடத்தக்கது.

# துணுக்காய் - பாண்டியன்குளம் பிரதேசத்தில் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதில் சிரமம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய், பாண்டியன்குளம் ஆகிய பிரதேசங்களில் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதில் பெரும் சிரமங்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பிரதேசங்களில் கால்நடைகள் வளர்ப்போர் - கால்நடைகளைப் பயிர்செய்கைக் காலங்களில் பராமரிப்பதற்கான மேய்ச்சல் தரவைகள் இன்மையால், தற்காலிகமாக வவுனிக்குளத்தின் நீரேந்து பிரதேசங்களில் பராமரித்து வருகின்றனர்.

அண்மை நாட்களாகப் பெய்து வரும் மழைகாரணமாக வவுனிக்குளத்தின் நீர்மட்டம் - 02 அடியைத் தாண்டிவிட்டது.

இதனால் கால்நடைகளை வைத்துப் பராமரிக்க முடியாத நிலையில், கால்நடைவளர்ப்போர் பெருஞ்சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இந்தக் கால்நடைகளை ஏனைய பிரதேசங்களுக்கு கொண்டுசென்று பராமரிப்பதற்கு, அந்தப் பிரதேச அமைப்புக்கள் அனுமதி வழங்காமையால் - பாண்டியன்குளம், துணுக்காய் பிரதேசங்களில் கால்நடைகளால் பயிரழிவுகள் ஏற்பட்டு வருகின்றதுடன், கால்நடை வளர்ப்போரும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

# மன்னார் கடற்பரப்பில் அத்துமீறிய இரண்டு இந்திய மீனவர்கள் கைது

(மன்னார்)

மன்னார் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் இருவர் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு தலைமன்னார் - பேசாலை கடற்பரப்பில் மீண்டும் அத்துமீறி மீன்பிடித்தொழிலில் ஈடுபட்ட, இந்திய இழுவைப்படகில் இருந்த இரு மீனவர்களையும் கைது செய்து, மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தியதையடுத்து, எதிர்வரும் 3 ஆம் திகதி வரை இந்த இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த இரு மீனவர்களும் அனுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*அடுத்து காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்து காட்டும் முகம்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## ஜனாதிபதியால் சமாதானத்தை உறுதி செய்யவே முடியாது

சமாதான முயற்சிகளின் எதிர்காலம் எப்படி இருக்கப் போகிறது? இதுவே இன்று சகலதரப்பினரையும் குழப்பத்திலாழ்த்திவரும் கேள்வியாகும். இந்தக் கேள்விக்கான சரியானதும், உறுதியானதுமான விடையை வெளிப்படையாகக் கூறும் திறன் தற்போதைய சூழலில் எவரிடமும் இல்லையென்றே கூறவேண்டும்.

உண்மையில் சமாதான முயற்சிகளின் அடுத்தகட்ட நகர்வுகள் குறித்து தீர்மானமெடுக்கவேண்டிய பொறுப்பு அரசாங்கத்தையே சார்ந்ததாகும். ஏற்கனவே கடந்த – கலைக்கப்பட்ட – ஐக்கிய தேசிய முன்னணி அரசின் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தை நகர்வுகள் அப்போதைய அரசின் முடிவெடுக்கும் திறனற்ற, வலுவற்ற நிலை காரணமாகவே தற்காலிகமாக இடைநிறுத்தப்படவேண்டிய நிலை உருவானது.

அப்போது நாட்டில் நிலவிய இரட்டை ஆட்சிமுறை சமாதானத்தை உறுதியானமுறையில் முன்னெடுப்பதற்கு இடையூறாக இருந்ததுடன் – அதிகார வலுக்கொண்டவரும், தீர்மானமெடுக்கும் சக்தி மிக்கவருமான ஜனாதிபதி சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பை வழங்கும் மனோநிலை கொண்டவராகவும் இல்லாதிருந்ததால் – ரணில் விக்கிரமசிங்க அரசால் அவரை மீறி எதுவும் செய்யமுடியாத நிலையே நிலவியது.

அதுமட்டுமல்ல சமாதான முயற்சிகளுக்கு அனுசரணையாளராக அழைக்கப்பட்ட நோர்வே மீது ஜனாதிபதிக்கு நம்பிக்கையும் இருக்கவில்லை.

எனவே, சமாதான முயற்சிகளின் எதிர்காலம் அப்போதும் தள்ளாடிக்கொண்டேயிருந்தது.

அந்தத் தள்ளாட்டத்தை ஒரேயடியாக நிறுத்தி அதனை முற்றாகவே செயலிழக்கச் செய்யும் நோக்குடன், அன்றைய ஆட்சியைக் கலைத்த கைங்கரியத்தைச் செய்தவர் இன்றைய ஜனாதிபதியேயாவார்.

அப்போது விழுந்துபடுத்துவிட்ட சமாதான முயற்சிகளை மீண்டும் எழுப்பி இயங்கச் செய்யும் முயற்சிகள் புதிய ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி ஆட்சி பதவியேற்றதும் – அந்த ஜனாதிபதியின் நம்பிக்கைக்குட்படாத, நோர்வேயை வரவழைத்தே ஆரம்பிக்கப்பட்டபோதும் அதில் இம்மியளவு முன்னேற்றமும் ஏற்படாமைக்குக் காரணம் புதிய ஆட்சியை பங்கு போட்டுக் கொண்டிருக்கும் அனைத்துக் கட்சிகளும் சமாதானத்தை எதிர்ப்பவர்களாகவும் அதற்கு அனுசரணை புரிவோரை எரிச்சலுடன் நோக்குபவர்களாகவும் இருக்கின்றமையேயாகும்.

சமாதான எதிர்ப்புச் சக்திகளையும், பேரினவாத சிந்தனையாளர்களையும்அணிசேர்த்துக் கொண்டு அவர்களின் பக்க பலத்துடன், பலவீனமான அரசொன்றை உருவாக்கி ஆட்சியைத் தொடரும் ஜனாதிபதியால் அவர்களை எதிர்த்துக் கொண்டு அமைதி முயற்சிகளை முன்னெடுக்கும் மனப்பக்குவம் கிடையவே கிடையாது.

ஆகவே சமர்தான முயற்சிகளில் ஆர்வம் காட்டுவது போன்று சர்வதேச சமூகத்தின் முன்னர் நடித்துக் கொண்டு, இராணுவத்தைப் பலப்படுத்தி மீண்டும் ஒரு போர்ச் சூழலை உருவாக்கும் மூலோபாயங்களை அவர் தொடர்ந்து திட்டமிட்டு நிறைவேற்ற முயன்று வருகின்றார் என்பதையே, அவரது அண்மைக்கால நடவடிக்கைகள் நிரூபித்து வருகின்றன.

சமாதான முன்னெடுப்புக்களின் ஆரம்பம் முதலே தமது நிலைப்பாட்டில் தெளிவாகவும், உறுதியாகவும் இருக்கும் விடுலைப் புலிகள் குறித்தும் – அவர்களின் நடவடிக்கைகள் குறித்தும் பொய்யானதும், புனைவுகளைக் கொண்டதுமான பிரசார உத்தியுடன் கூடிய கருத்துக்களை வெளியிட்டு அவர்களுக்கு சினமேற்றி, பொறுமையைச்சோதிக்க முயன்றுவரும் ஜனாதிபதியும், அரசும் அமைதி முயற்சிகள் குறித்த தங்களது அக்கறையற்றதும், காலம் கடத்தி ஏமாற்றும் உத்திகளைக் கொண்டதுமான செயற்பாடுகளையே தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார்கள் என்றே கூறவேண்டும்.


விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனையின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க தான் தயாராக இருப்பதாக அமெரிக்க பிரதி ராஜாங்கச் செயலர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ்ஜிடம் கூறியுள்ள ஜனாதிபதியால் – இதனை இருவாரங்களின் முன்னர் சமாதான முயற்சி தொடர்பாக தன்னைச் சந்தித்துப் பேசிய நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜான் பிற்றர்சன் மூலமாக விடுதலைப் புலிகளிடம் தெரிவிக்க முடியாமல் பேனமைக்கு காரணம் என்ன?

நோர்வேக்கு ஒருமுகம், இந்தியாவுக்கு மற்றொரு முகம், அமெரிக்காவுக்கு இன்னொரு முகமென நேரத்துக்கு நேரம் மாற்றிக் கொள்ளும் ஜனாதிபதியால் சமாதானம் தொடர்பாக நேர்மையானதும், தெளிவானதுமான ஒரு முகத்தைக் காட்ட முடியாமல் இருப்பது வியப்பைத் தரும் விடயமே அல்ல...

தேசிய முக்கியத்துவம் மிக்க பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் கூட, நேர்மையுடன் நடக்கத் தயங்கும் ஜனாதிபதியால் இந்த நாட்டை தேசப்பற்றுடன் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல முடியுமென எப்படி நம்புவதாம்?

இந்தச் சூழலில் சமாதானம் மீது தான் விசுவாசமாக இருப்பதாக ஜனாதிபதி அறிவித்து வருவது, மக்களையும், சர்வதேசத்தையும் கேலிசெய்வதாகவே உள்ளது.

## நாடும் நடப்பும்




# அறிவைத் தேடிப்பெறும் ஆர்வம் பலரிடம் வற்றிப் போய்விட்டது!

## ஆறு திருமுருகன் கருத்துரை

இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள சைவ மக்கள் என்றிருக்கும் பலரும் கோயில்களில் உள்ள விக்கிரகங்களுக்கோ அல்லது வணக்க முறைகளுக்கோ சரியான விளக்கம் சொல்ல முடியாதவர்களாகவே இருக்கின்றனர்.

பல கோயில்களது அறங்காவலர்களுக்குக்கூட இவற்றுக்கு விளக்கங்கள் தெரிவதில்லை. கோயில்களின் வாசலிலே இரு பக்கத்திலும் உள்ள துவார பாலகர்களைக் காட்டி தாயாரிடம் பிள்ளை இது யார் எனக் கேட்கும்போது, நீங்கள் ஐஸ்கிறீம் கேட்டு அழுதால் உங்களைப் பிடிப்பதற்காக இருப்பவர் என்று கூறி துவாரபாலகர்களை பூதங்களைப் போல விளக்கம் கொடுக்கும் அன்னையர் பலரை நான் சந்தித்துள்ளேன்.

பல இளைஞர்களுக்குக் கூட தெய்வங்களது பெயர்களைச் சரியாக உச்சரிக்கக்கூடத் தெரிவதில்லை. புராண, இதிகாச அறிவு குறைவுடையவர்களாகவே எமது இளம் தலைமுறையினர் உள்ளனர்.

நல்லூரில் சுமார் 15 வருடத்துக்கு மேலாக வசித்து வரும் ஒருவரிடம் ஜமுனா ஏரி பற்றி விசாரித்தேன். தனக்குத் தெரியாது எனக் கூறினார். சமயம் சார்ந்த விடயங்களில் பொது அறிவையும் தேடிப் பெறும் ஆர்வம் எங்களில் பலரிடம் வற்றிப்போய்விட்டது. இந்தத் துன்பமான நிலையை நிவர்த்திக்க நாம் சகல வழிகளையும் கையாளவேண்டும் என்று ஆறு திருமுருகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால் நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியின் பரிசளிப்பு வைபவம் - அண்மையில் நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ்.மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெற்றபோது, அங்கு கருத்துரை வழங்குகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துரை வழங்குகையில் - எதிர்காலத்தில் பாடப் புத்தகங்களில் உள்ள வரலாறை அறிவது மட்டும் அன்றி சூழலில் உள்ளவற்றை அறியும் வண்ணமான கேள்விகளை வினாப்பத்திரங்களில் அடக்கவேண்டும்.

திருவாவடுதுறை ஆதீனம், ஆறுமுகநாவலர் உட்பட இலங்கையைச் சேர்ந்த மூன்று பேருக்கு நாவலர் பட்டத்தை வழங்கியுள்ளது. சபாபதி நாவலர், அம்பலவாண நாவலர் என்பவர்களே மற்றைய இருவர். இந்த விடயம் பற்றிய கேள்விகளை தமிழ் நாட்டின் சில பரீட்சையில் கேட்கின்றனர். ஆனால் எம்மிடம் இது பற்றிய அறிவும் இல்லை. சைவசமயப் போட்டிகளில் இவ்வாறான கேள்விகளை நாம் உள்ளடக்குவதும் இல்லை.

சைவசமயம் சார்ந்த வில்லுப்பாட்டு, கதா பிரசங்கம் போன்றவற்றையும், பல்கலைக்கழக பாடத்திட்டங்களையும் கொண்டு வர நாம் பல தடவை முயற்சி எடுத்தோம். அந்த முயற்சிகள் ஒரு சில படிகள் முன்னேறி வருகையில், எமது பல்கலைக்கழகத்துக்குள்ளேயே அதற்கு ஆதரவு இல்லாமல் போக அந்த முயற்சிகள் தோல்வியுற்றன.

எமது கலாசார விழுமியங்கள் விருத்தியடைவதற்கு எமக்குள்ளேயே பல்வேறு தடைகள் பல்வேறு மட்டங்களிலும் உள்ளன. வந்து எமது ஆலயங்களில் தேவாரம் பாடிக் கொண்டிருங்கள் - மாதம் இருபதாயிரம் தருகிறோம் என்று விளம்பரம் செய்தாலும் ஒருவரும் வருவதாக இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (31)

## ஈச்சங்காட்டு மக்கள் பலருக்கு யு.என்.எச்.சி.ஆரின் உதவி கிடைக்கவில்லை

அரியாலை - ஈச்சங்காட்டுப் பகுதியில் உள்ள மக்கள் பலருக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தால் வழங்கப்படும் நிவாரணப் பொருட்கள் கிடைக்கவில்லை என அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

அண்மையில் அரியாலைப் பகுதியில் இடம்பெயர்ந்த 'இ' அட்டையுள்ள மக்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் அரியாலை சனசமூக நிலையத்தில் வைத்து உதவிப் பொருட்களை வழங்கியது.

ஆனால் ஈச்சங்காடு பகுதியில் உள்ள மக்கள் பலரின் உணவு அட்டை, மீளாய்வு காரணமாக அந்தப் பகுதிக்குப் பொறுப்பாக இருந்த கிராம அலுவலரிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது.

இதனால் அன்றைய தினம் அவர்களின் உணவு அட்டைகளை அந்தப் பகுதி கிராம அலுவலர் கொண்டு வராத காரணத்தால், அந்தப் பகுதி மக்களுக்கான உதவிப் பொருட்கள் பிறிதொரு தினத்தில் வழங்குவதாகக் கூறப்பட்டது.

இது நடைபெற்று இரண்டு மாதங்களுக்கு மேலாகியும், இதுவரை தமக்கு உதவி எதுவும் கிட்டவில்லை என அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

ஈச்சங்காட்டுப் பகுதியிலிருந்து கடந்தகால யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த இந்த மக்கள் இதுவரை தமது சொந்த இடங்களுக்கு மீளக்குடியேறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (55)

## இரவு 7.30 மணியுடன் மதுக்கடைகளை மூட தீர்மானம்

சாவகச்சேரி கைத்தொழில் வணிக மன்றத்துக்குட்பட்ட மதுபான விற்பனை நிலையங்கள் அனைத்தையும் இரவு 7.30 மணியுடன் மூடவேண்டும் என வணிகர் கழகத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்ற கைத்தொழில் வணிகர் கழகத்தின் கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. இரவு நேரங்களில் நகரப் பகுதியில் அமைதியின்மையைக் குறைக்கும் முகமாகவே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தீர்மானம் நாளைமறுதினம் முதல் நடைமுறைக்கு வரும் என வணிகர் கழகச் செயலாளர் ராஜரட்ணம் தெரிவித்தார். (25)

## தையல் பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

2005 ஆம் ஆண்டுக்கான தையல் பயிற்சி பயிலுநர்களுக்கான விண்ணப்பங்கள் கரவெட்டிப் பிரதேச செயலகத்தினால் கோரப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சபையினரால் கோரப்படும் இந்தப் பயிற்சி நெறிக்கான விண்ணப்ப இறுதிநாள் 15.12.2004 ஆகும். இதற்கான மாதிரி விண்ணப்பப் படிவம் பிரதேச செயலகத்தின் விளம்பரப் பலகையில் போடப்பட்டுள்ளது.

விண்ணப்பம் செய்ய விரும்புபவர்கள் விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்து 15.12.2004 இற்கு முன்னர் பிரதேச செயலகத்துக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (17)

## தையல் டிப்ளோமா பரீட்சை டிசம்பரில்

தென்மராட்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட 2004 ஆம் ஆண்டு தையல் டிப்ளோமா பயிற்சி பெற்றோருக்கான பரீட்சைகள் - டிசம்பர் மாதம் நடைபெறவுள்ளதாக பிரதேச செயலக அதிகாரி தெரிவித்தார்.

தையல் பயிற்சியில் 80 வீதமான வரவையுடைய மாணவிகள் அனைவரும் பரீட்சைக்குத் தோற்றமுடியும் என பிரதேச செயலக அதிகாரி மேலும் தெரிவித்தார். (25)

# ஆயுதப் போராட்ட ஆரம்ப கட்டத்தில் புலிகள் சயனைட்டைப் பயன்படுத்தினர்

(நேற்றைய தொடர்ச்சி...)

தியாகி சிவகுமாரன் சயனைட் அருந்தி வீரமரணமடைந்த பின்னர், அவனைப் போல விசுவாசமான பல போராளிகள் போராட்டத்தில் சேர்ந்து கொண்டனர். இவர்களும் சிவகுமாரனைப் போல சயனைட் வில்லைகளை தம்மைக் காக்கும் ஒரு கேடயமாகப் பயன்படுத்தலாயினர். 1984 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி விடுதலைப் புலிகள் போராளி பசீர்தன் (செல்வம் - மண்டைதீவு) சயனைட் அருந்தி வீரமரணமடைந்த விடுதலைப்புலிகள் இயக்க முதல் போராளி ஆவார். இதையடுத்து இராணுவ சுற்றி வளைப்பின் போது இராணுவத்துடன் மோதிக் காயப்பட்ட நிலையில் பல போராளிகள் பல தடவைகள் சயனைட் அருந்தி வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார்கள்.

ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பகால வளர்ச்சிக் கட்டத்தில், விடுதலை புலிகள் சயனைட்டைப் பயன்படுத்தத் தொடங்கிய போது, பல வாதப்பிரதிவாதங்களை ஈழ விடுதலைக்காகப் போராடுவதாகக் கூறிக்கொண்ட பல்வேறு தமிழ்க் குழுக்கள் முன் வைத்தன. விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தவிர ஏனைய இயக்கங்கள் எல்லாம் ஒரு போராளியானவன் எதிரியிடம் சிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டால் சயனைட் போடக் கூடாது என்ற கருத்தையே கொண்டிருந்தன. 1984 - 1985 கால கட்டத்தில் ஒரு இயக்கம், போராளிகளே நீங்கள் மக்களின் சொத்து. சயனைட் போட உங்களுக்கு உரிமை இல்லை எனக் குறிப்பிட்டுப் பெரிய சுவரொட்டிகளை ஒட்டியது. இன்னொரு இயக்கத்தின் லண்டன் பிரமுகர் ஒருவர், சயனைட் வில்லைகளைப் போராளிகள் பயன்படுத்துவது பற்றி முரண்பாடான கருத்தைக் கொழும்பிலிருந்து வெளியாகும் ஒரு ஆங்கிலப் பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

ஆனால் தியாகி சிவகுமாரனை ஆதர்சமாக நேசிக்கும் போராளிகள், அவன் வழியை ஏற்றுக் கொண்டனர். விடுதலைப்புலிகள் சயனைட்டைத் தமது கவசமாக மட்டுமல்லாமல் எதிரிக்கு எதிரான ஒரு ஆயுதமாகவும் பயன்படுத்தி இருக்கிறார்கள். உதாரணம் 05-10-1987 அன்று பலாலி இராணுவ முகாமில் சயனைட் அருந்தி மரணமான 12 வேங்கைகள் தம்மிடம் ஆயுதம் இல்லாத நிலையிலும் கூட, தம்மைத் தாக்க வந்த சிங்களச் சிப்பாயகளை சயனைட் போட்ட பின் கடித்தமையால் கோப்ரல் அமரசிங்கா, சிப்பாய் செனிவிரத்தின ஆகிய இருவரும் கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு அங்கே மரணமடைந்தார்கள்.

விடுதலைப்புலிகள் சில வேளைகளில் எதிரியால் சுற்றி வளைக்கப்படும் போது, ஒரு சயனைட்டை ஒன்றுக்கு மேற்பட்ட போராளிகள் அருந்தி வீரமரணமடைந்திருக்கிறார்கள்.

கிழக்கு மாகாணத்தில் 1987 ஆம் ஆண்டு சிறிலங்கா அதிரடிப்படையால் சுற்றி வளைக்கப்பட்ட நிலையில், லெப்.உமாராமும், அன்ரனும் ஒரே சயனைட்டை பகிர்ந்து அருந்தி வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார்கள். இது இலங்கைத் தமிழர்களின் ஆயுதப் போராட்ட வரலாற்றில் ஒரு புதிய பரிணாமத்தை வெளிப்படுத்தியது. தேசத்தின் விடுதலைக்காக இராணுவ இரகசியங்களைக் காப்பாற்றும் முகமாக, இயக்கத்தின் மரபுகளைக் கட்டிக் காப்பதற்காக இரண்டு போராளிகள் நஞ்சைப் பகிர்ந்து கொண்டமை பலரது நெஞ்சையும் நெகிழ வைத்தது. ஒரு முறை தளபதி கிட்டுவிடம் ஒரு வெளிநாட்டுப் பத்திரிகையாளர் ஒரு கேள்வியைக் கேட்டார். அதற்குப் பதிலளித்த கிட்டு, எமது கழுத்தில் சயனைட் இருக்கும் வரை நாம் யாருக்கும் பயப்படவேண்டிய அவசியமில்லை எனக்குறிப்பிட்டார்.

எமது தமிழ் சமுதாயம், நீண்ட நெடுங் காலமாகவே தமக்கு ஆயுள் பலம் வேண்டி ஆலயங்களில் பிரார்த்தனை செய்வதும், கையிலும், கழுத்திலும் தாயத்தும் அட்சரக் கூடும் கட்டிக் கொள்வதைப் பாரம்பரிய வழக்கமாக கொண்டிருக்கின்றது. ஆனால் விடுதலைப் புலிகள் அகால மரணத்தை எதிர்கொண்டே சயனைட்டைக் கழுத்தில் கட்டினார்கள்.

இலங்கை இராணுவத்தின் முற்றுகைகளின் போதும் இந்திய இராணுவத்தின் தேடுதல் நடவடிக்கைகளின் போதும் அவர்களுடன் மோதிப் பலர் காயப்பட்ட நிலையில் சயனைட் அருந்தி வீரமரணத்தைத் தழுவிக் கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு தொகையான போராளிகள் சயனைட் அருந்தி நாட்டு விடுதலைக்காக வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட ஒரு பெருமைக்குரிய வரலாற்றை இலங்கைத் தமிழர் போராட்ட வரலாற்றில் தான் காணலாம். அந்த வரலாற்றுப் பெருமை முழுக்க முழுக்க விடுதலைப்புலிகளுக்கே உரியதாகும்.

1988 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்ற மாகாணசபைத் தேர்தலை பகிஷ்கரிக்கும்படி பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த காரைநகரைச் சேர்ந்த சக்கரை (த.துரைராஜா) அதே இடத்தைச் சேர்ந்த கோபி (ஆறுமுகம் தவபாலன்) ஆகிய இரு போராளிகளும் இந்திய இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்ட நிலையில், தண்ணீர் எடுக்க வந்த பொதுமக்களைக் காப்பாற்றும் முகமாக மோதலைத் தவிர்த்து, தம்மிடம் இருந்த ஒரேயொரு சயனைட்டை இருவரும் அருந்தி மரணத்தைத் தழுவிக் கொண்டனர். மக்கள் மீது விடுதலைப்புலிகள் கொண்ட நேசத்தை இது வெளிப்படுத்தியது.

இதேபோல் அம்பாறை மாவட்டத்தில் 19-03-1989 அன்று விநாயகபுரத்தில் சுற்றி வளைப்பு ஒன்றின் போது ஏற்பட்ட மோதலின் பின் ரமணி, நிதி என்ற இரு போராளிகளும் ஒரு சயனைட்டைப் பகிர்ந்து கடித்தபின் கையில் இருந்த கைக்குண்டுகள் இரண்டைத் தமது அடிவயிற்றில் சுழற்றி வைத்து விட்டுப் படுத்துக் கொண்டனர். இறந்த அவர்களது உடல்களைப் புரட்டிப் பார்க்க வந்த இந்தியப் படையினர் நால்வரில் இருவர் கிரனைட் வெடித்து இறந்தனர். மற்ற இருவரும் படுகாயமடைந்தனர்.

களத்தில் காயப்பட்ட நிலையில் எதிரியிடம் துப்பாக்கிகளுக்கூடாக அவர்களுக்குப் புரிந்த இராணுவ மொழியில் பதிலளித்துக் கொண்டிருந்த சக போராளிகளுக்குத் தான் சுமையாகிவிடக் கூடாதென்பதற்காக லெப். பரமதேவா, வீரவேங்கை ரவி ஆகிய இரு போராளிகளும் 22-09-1984 அன்று இடம் பெற்ற களுவாஞ்சிக்குடிப் பொலிஸ் நிலையத் தாக்குதலின் போது சயனைட்டை அருந்தி வீரமரணத்தைத் தழுவிக் கொண்டனர். அதேபோல முல்லைத்தீவிலுள்ள கள்ளிக் காட்டில் இந்திய இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின் போது 14-03-1988 அன்று கப்டன் வாதவூரன் (த.யோகேஸ்வரன்) சக போராளிகளுக்குத் தான் இடையூறாக இருக்கக் கூடாது என்பதற்காக சக போராளிகளைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னார்.

"என்னைக் காப்பாற்ற நினைக்காதீர்கள். போராட்டத்தைக் காப்பாற்றுங்கள், மண்ணைக் காப்பாற்றுங்கள், எதிரியை நோக்கிச் சுடுங்கள்" என்று கூறிவிட்டு சயனைட் போட்டு மரணத்தைத் தழுவிக் கொண்டார். குண்டடிபட்டுக் குருதி வழிந்தோட குற்றுயிராகக் கிடந்த நிலையிலும் இப்படியாகப் பல விடுதலைப்புலிகள் பல தியாக வரலாற்றைப் படைத்திருக்கிறார்கள். வல்வெட்டித்துறையில் சுற்றிவளைப்பின் போது மேஜர் சலாம், மன்னாரின் வெள்ளாங்குளத்தில் மேஜர் நரேன் போன்ற பல எண்ணற்ற தியாக வேங்கைகள் படைத்த வீரவரலாறு தனித்துவமானது. 1987 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் தலைவர் வே.பிரபாகரனிடம் சயனைட் பற்றி ஒரு பத்திரிகையாளர் கேட்டபோது அவர் பின்வருமாறு சொன்னார். "நான் தான் முதலில் சயனைட் கட்டினேன். அதன் பின்னரே மற்றவர்களைக் கட்டச் சொன்னேன். எதிரிகளிடமிருந்து எம்மைக் காப்பாற்றிக் கொள்ளவும் எம்மோடு கூட இருந்து வீரமரணமடைந்த எண்ணற்ற நண்பர்களின் ஞாபகார்த்தமாகவும் நாங்கள் இதனை எங்கள் கழுத்தில் அணிநது கொள்கிறோம்'' என்றார்.

கருத்துருவாக்கம்: அருணன்பிரசாத்

## தமிழீழ மாவீரர் நாள்

### போற்றப்பட வேண்டிய பண்பாடாகட்டும்

எமது தாயகமாம் தமிழீழ நாட்டின் தேசிய நாட்களில், மாவீரர் நாள் மிக முக்கியமானதாகும். மாவீரர் நாள் என்பது, தமிழீழத்தின் விடிவிற்காகவும், உயர்விற்காகவும் உழைத்து உயிரைத் தற்கொடையாக ஈந்து இந்த மண்ணுக்கே உரமாகி விட்டவர்களினதும், எமது மூச்சுடன் கலந்துவிட்டவர்களினதுமாகிய நினைவு நாளாகும்.

உங்கள் உயிரிலும் மேலான குழந்தைகளும், எமது சக போராளிகளுமான இந்த மாவீரர்களின் தியாகம், அவர்களின் உணர்வுகள், இலட்சிய தாகம், கனவுகள் என்பன எம்மால் மறக்கப்பட முடியாதவையும். புனிதத் தன்மை வாய்ந்ததுமாகும். காலம் காலமாக நினைவு கூர்ந்து என்றும் போற்றப்பட வேண்டியவையாகும். இந்த மாவீரர்களின் நினைவுகள் என்றும் எம்மை வழி நடாத்தும் உந்து சக்தியாக இருக்கும். மாவீரர்களது இத்தகைய நினைவுகூரல் என்பது ஒரு நிகழ்வாக இருந்து விடாது, எமது நாட்டு மக்களின் வரலாற்றுச் சுவடியாகவும், பண்பாட்டுக்குரியவையாகவும் வளர்ந்து வரவேண்டும். இந்த எமக்குரிய உயரிய நிகழ்வை தத்துவார்த்தமாகவும், உணர்வுபூர்வமாகவும் நிலைநாட்டுவதற்காக எமது தமிழீழ மக்கள் அனைவரினதும் மனமுவந்த ஒருங்கிணைந்த பங்களிப்புக்களை வேண்டி நிற்கின்றோம்.

தமிழீழ மாவீரர் பணிமனை

## வாரநோக்கு...

- யாழவன்

# சாது மிரண்டால் காடு கொள்ளாது

அப்பாவி இரு இளைஞர்கள் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொலை! ஆத்திரமுற்ற பொதுமக்கள் படையினரின் காவலரணை எரிப்பு! அடக்கமுறப்பட்ட படையினர் மற்றும் பொலிஸார் மீது பொதுமக்கள் கல்லெறி என உணர்ச்சிகரமானதொரு வாரமாகக் கடந்த வாரம் கடந்துள்ளது. பொறுமையாக இருக்கும் பொதுமக்களைச் சீண்ட முற்படும் சிறுமைத்தனத்துக்குரிய பலனை படையினர் இப்போது கண்டுள்ளனர். சாது மிரண்டால் காடு



கொள்ளாது என்பது நன்றாகத் தெரிந்துள்ளது.

ரயர்களைப் போட்டு எரித்து வீதிகளைப் பொதுமக்கள் தடை செய்ததால் படையினரின் போக்குவரத்தும் முற்றாக முடக்கப்பட்டிருந்தது. இத்தகையதொரு போராட்டத்தை பொதுமக்கள் ஒருமாத காலத்துக்குத் தொடர்ந்து நடாத்துவார்களாக இருந்தால் படையினரின் பாடு திண்டாட்டமாகவே இருக்கும். இதனைப் படைத்தரப்பு நன்கு உணர்ந்து கொள்ளுமாக இருந்தால், இனிவரும் காலங்களிலாவது பொதுமக்களின் பொறுமையைச் சோதிக்கும் நடவடிக்கைகளிலே ஈடுபடமாட்டார்கள்.

தமிழீழ மாவீரர் வாரம் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த நிலையில், அதனைக் குழப்ப எத்தனிக்கும் தீயசக்திகளின் வெளிப்பாடாகவே இரு இளைஞர்களின் கொலை நடந்து முடிந்துள்ளது. தமிழீழ தேசியத் தலைவரின் ஐம்பதாவது பிறந்த நாளைச் சிறப்புற கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்த வல்வெட்டித்துறை ஆதி கோவிலடியைச் சேர்ந்த இளைஞர்களுள் இருவரே சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை திரிபுபடுத்தி அதனை விடுதலைப்புலிகளே செய்ததாக திசைமாற்றுவதற்கான செயற்பாடுகளிலேயே படைத்தரப்புத் தற்போது முழுமையாக ஈடுபட்டு வருகிறது. சம்பவம் நடைபெற்ற இடத்திலே இருந்த ஈ.பி.டி.பி.யின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் காயமடைந்தமையைக் காரணமாக வைத்து, அவரை இலக்கு வைத்தே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும், அதன் போதே தவறுதலாக இந்த இளைஞர்கள் இரண்டு பேரும் இறந்துள்ளதாகவும் புதிய கதையொன்றைப் புனைய இராணுவத் தரப்பு பகிரத முயற்சி எடுத்து வருகிறது.

இதற்காக நாட்டின் சட்டங்களைப் பாதுகாக்க வேண்டிய பொலிஸாரும் அவர்களோடு இணைந்து இராணுவமும் பல அராஜகங்களில் ஈடுபடுவதுடன் சட்டத்துக்கு முரணான வகையிலான செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றனர். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளியை அந்த வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியின் அனுமதியின்றி, வைத்தியசாலைப் பதிவேட்டிலே ஒப்பமிடாது விடுதியிலிருந்து அழைத்துச் சென்றமையானது, எந்தளவு தூரம் சட்டத்துக்கு முரணானது என்பது பலருக்கும் தெரிந்த விடயம். எனவே இத்தகைய சட்ட மீறலைச் செய்தவர்களுக்கு இந்த நாட்டின் நீதித்துறை வழங்கவுள்ள தண்டனையென்ன? அல்லாது போனால் இந்த விடயம் இப்படியே கைவிடப்படுமா?

இதனைவிட இன்னுமொரு முக்கியமானதொரு சட்டமீறலும் நடைபெற்றுள்ளது. அதாவது இராணுவ வீரர் இல்லாத ஒருவருக்கு எவ்வாறு இராணுவ சீருடையை அணிவிக்க முடியும்? இல்லாவிடில் காயமடைந்த ஈ.பி.டி.பி உறுப்பினர் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்தவரா? இதன்படி நோக்கின் ஈ.பி.டி.பி.யினர் இராணுவத்தினரின் ஒரு பிரிவாக செயற்படுகின்றனரா? இவர்களுக்கு இராணுவத்தினரின் சம்பளப் பட்டியலில் வைத்து கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன என்ற செய்தி இதன் மூலம் உண்மையாகிறதா? இதிலே எந்தக் கேள்விக்குரிய விடையும் ஈ.பி.டி.பி.யினரின் சுயரூபத்தை மக்கள் முன்னே அம்பலப்படுத்துவதாகவே இருக்கும்.

ஏற்கனவே துரோகத்தனத்துக்கு விலை போன ஒருவரை வைத்துக் கொண்டு அவரை பகடைக் காயாக்கி. தனது திருவிளையாட்டை, நகர்த்த முயல்கிறது இராணுவம். இதற்காக இரு அப்பாவி இளைஞர்களின் கொலையை அநியாயமான முறையிலே திசை திருப்பி நீதியின் கண்களைக் கட்ட முயல்கிறது. இலங்கை நீதிமன்றங்களிலேயுள்ள நீதி தேவதையானது, கண்களைத் துணியால் கட்டியுள்ளமைக்கான விளக்கம் வேறானதாகவே இருக்கும். அதாவது நீதியின் கண்கள் செத்துவிட்டன என்பதையே இது குறிக்கின்றது.

கடந்த வருடமும் இரு இளைஞர்கள் இராணுவ வாகனம் ஒன்றால் மோதுண்டு பலியானபோத, பொதுமக்கள் இத்தகையதொரு பாரிய எதிர்ப்பையே படையினர் மீது காட்டினர். அதன் போதும் படையினர் மக்களுக்கு எதிராக அடாவடித்தனத்தைக் கட்டவிழ்த்து விட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பாக இலங்கை நீதித்துறையைச் சேர்ந்த நீதிபதியொருவர், மக்கள் தமது கைகளிலே சட்டத்தை எடுத்துள்ளனர். இது பிழையானவிடயம். வன்முறையிலே ஈடுபடும்படி மக்கள் தூண்டப்பட்டிருக்கிறார்கள் என்றெல்லாம் கருத்துக் கூறியிருந்தார். இவரது கருத்து உண்மையானதாக இருக்க வேண்டுமாக இருந்தால் அந்த விபத்திலே சம்பந்தப்பட்ட வாகன சாரதிக்கு உரிய தண்டனை வழங்கப்பட்டிருக்க வெண்டும். அதனை விடுத்து அவரைப் பிணையிலே விடுவித்தமையும், வழக்கை பல மாதங்களாக இழுத்தடிப்பதுமே மக்களைப் பொறுமையிழக்கச் செய்கிறது.

இதனாலேயே அராஜகங்களும். அநியாயங்களும் நடைபெறும் போது, பொதுமக்கள் வன்முறையிலே ஈடுபடுகிறார்கள். இவர்களது வன்முறையானது, நீதியானதாகவும், நியாயமானதாகவுமேயுள்ளது. ஆனால் மக்களுடைய எதிர்ப்பலைகளை பொறுக்கமாட்டாது, அதற்கு முகம் கொடுக்கத் திராணியற்ற அரசும், இராணுவமும் மற்றும் அரசின் அடிவருடிகளும் மக்கள் போராட்டங்களை அடக்க முயல்கின்றமையும் அவற்றை திசை திருப்ப முயல்கின்றமையும் நியாயமற்ற செயலேயாகும்.

வல்வெட்டித்துறையிலே இளைஞர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை ஆழமாக ஆராய்ந்து பார்த்தால், பல உண்மை



கள் வெளிவரும். மைதானத்திலே விளையாடிக் கொண்டிருந்த இளைஞர்கள் மீது இலக்கின்றி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது. இதற்காக இயந்திரத் துப்பாக்கியொன்றும் பயன்படுத்தப்பட்டுள்ளது. யாராவது சாக வேண்டுமெனும் நோக்கத்திலேயே இந்த துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளதே தவிர எவரையும் குறிவைத்து நடத்தப்படவில்லை. பின்னால் நின்ற ஈ.பி.டி.பி.யின் முன்னாள் உறுப்பினர் காயமடைந்தமையானது, கொலையாளிகளைத் தப்பவைப்பதற்கான பிடியாக இராணுவத்தினருக்கு அமைந்துள்ளது.

கொலைச் சம்பவம் நடைபெற்று முடிந்த கையோடு ஈ.பி.டி.பி உறுப்பினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவித்திருந்தால், இதனை ஓரளவுக்கு ஏற்றுக் கொள்ள முடியும். ஆனால் சம்பவம் நடைபெற்று இருபத்து நான்கு மணி நேரம் கடந்த பின்னரே இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர் ஈ.பி.டி.பி உறுப்பினர் என்பது தெரியவந்துள்ளது. அதன் பின்னர் விடுதலைப் புலிகள் மீது பழியைப் போடும் முயற்சியிலே ஈடுபட்டு இராணுவம் தப்ப முனைகிறது. ஆனால் இந்தப் பழியை ஏற்றுக் கொள்ளவோ, நம்பவோ

(11ஆம் பக்கம் பார்க்க)

# மத்திய கிழக்கில் அமைதியை ஏற்படுத்த புதிய வாய்ப்பு தோன்றியுள்ளதாம்!

## கொலின் பவல் தெரிவிப்பு





(டெல்அவிவ்)

மத்திய கிழக்கில் அமைதியை ஏற்படுத்த புதிய வாய்ப்பொன்று ஏற்படடுள்ளதாகத் தெரிவித்த அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொலின் பவல் - ஆனால், பலஸ்தீனர்கள் கண்டிப்பாக தமது பயங்கரவாத நடவடிக்கைகளைக் கைவிட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

இஸ்ரேல் சென்றுள்ள கொலின் பவல் பிரதமர் ஏரியல் ஷரோனைச் சந்தித்து கலந்துரையாடியதன் பின்னரேயே இதனைத் தெரிவித்தார். அவர் இந்த சமாதான முயற்சிகள் தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது -

எமக்கு உண்மையாகத் தேவைப்படுவது என்னவெனில் பலஸ்தீனர்கள் வெளிப்படையாகவே பயங்கரவாதத்திற்கெதிராக பேசவேண்டும் என்பதுதான்.

இஸ்ரேல் விஜயத்தை முடித்துக்கொண்ட கொலின்பவல், பலஸ்தீனத்தின் றமலா நகருக்குச் சென்று, பலஸ்தீன அதிகாரிகளைச் சந்தித்து யாசிர் அரபாத்திற்குப் பின்னரான சமாதான முயற்சிகள் தொடர்பாக விளக்கமளித்தார்.

இதேவேளை அமெரிக்கத் தூதுவரான வில்லியம் பேன்ஸ் நேற்றுமுன்தினம் பலஸ்தீன அதிகாரிகளைச் சந்தித்து எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள பலஸ்தீன ஜனாதிபதி தேர்தலுக்கு அமெரிக்கா உறுதியான ஆதரவு வழங்குமெனவும், அதுபோலவே இஸ்ரேலும் தனது ஆதரவை வழங்குமெனவும் தெரிவித்தார்.

இதனிடையே கொலின்பவல் றமலா நகருக்கு சென்றவேளையில் மேற்குக் கரைப்பகுதி நகரான பியூற்றூனியாவில் இஸ்ரேல் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

காரில் பயணம் செய்தவர்களை கைதுசெய்ய முற்பட்டவேளை அவர்கள் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகவும், இதனையடுத்து அவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டதாகவும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

கொல்லப்பட்ட இந்த மூவரும் அல் - அக்சா மார்ட்டியர் பிரிகேட்டைச் சேர்ந்தவர்களென பலஸ்தீனத் தகவல்கள் தெரிவித்தன.

இதனிடையே காஸாவில், குஷ் கற்றிவ் என்ற குடியிருப்பு பகுதியிலிருந்த பலஸ்தீன ஆயுதபாணியொருவர் சுட்டுக்கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.




# உலகின் மிக வயதான மனிதர் அமெரிக்காவில் காலமானார்!

உலகின் மிகவயதான (113) முதியவர் ப்ரீட் ஹாலி இரண்டு நாட்களுக்கு முன் அமெரிக்காவில் காலமானார். ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த ஜோன் ரியூடா வெட்ஸ் என்ற 114 வயதுடைய முதியவர் கடந்த மார்ச் மாதம் காலமானார். இதற்கு அடுத்தபடியாக அதிக வயதுடைய நபராக ப்ரீட் ஹாலி என்ற அமெரிக்கரின் பெயர் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றிருந்தது. 113 வயதான ஹாலி, கடந்த 1890 ஆம் ஆண்டு டிசெம்பர் முதலாம் திகதி பிறந்தார் 114-வது பிறந்த நாளை கொண்டாட 10 நாட்கள் உள்ள நிலையில் அவர் இரண்டு நாட்களுக்கு முன்னர் நிமோனியாவால் இறந்துவிட்டார்.



விண்வெளியில் காணப்படும் 'காமா' கதிர்களைப் பற்றி ஆராய்வதற்காக அமெரிக்கா சுவிப்ட் என்ற செயற்கைக்கோளை நேற்றுமுன்தினம் விண்ணில் ஏவியது. அமெரிக்கா, இத்தாலி, பிரிட்டன் விஞ்ஞானிகளின் ஒத்துழைப்புடன் உருவான சுவிப்ட் செயற்கைக்கோளைச் சுமந்துகொண்டு புளோரிடாவில் உள்ள கேப் கெனவர்ஸ் ஏவுதளத்திலிருந்து விண்ணில் பாய்கிறது டெல்ரா றொக்கட்

## உக்ரேன் தேர்தல் முடிவை எதிர்த்து


# ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்காக எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் குவிந்தனர்!

உக்ரேனில் நடைபெற்ற தேர்தலில் அரசாங்கம் முறைகேடுகள் புரிந்துள்ளதாகத் தெரிவித்து எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் சுமார் 10 ஆயிரம் பேர் தலைநகர் கிவ்வில் ஆர்ப்பாட்டமொன்றை நடத்துவதற்காகத் திரண்டுள்ளனர்.

உக்ரேனில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் 75 வீத வாக்குகள் எண்ணிமுடிக்கப்பட்ட நிலையில் தற்போதைய பிரதமரான விக்ரர் யனுகோவிச் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட எதிர்க்கட்சி வேட்பாளரான யஷ்சென்கோவைவிட முன்னிலை வகிக்கின்றார்.

இந்தத் தேர்தல் முடிவினை ஏற்றுக்கொள்ளாத எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் - உக்ரேனின் கிழக்குப்பகுதியில் 96 வீதமானோர் வாக்களித்தனர் என்பதனை தாம் நம்பத்தயாரில்லை எனவும் தெரிவித்தனர். நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தலானது இரண்டாம் கட்டமாகும், முதற்கட்டமாக முன்னர்நடந்த வாக்களிப்பும் கசப்பானதாகவே முடிவடைந்திருந்தது.

கருத்துக் கணிப்புக்களின்படி எதிர்க்கட்சி வேட்பாளரான யஷ்சென்கோ 11 புள்ளிகள் பெற்று முன்னிலை வகித்தார். இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த யஷ்சென்கோ - எனது வெற்றியில் நான் முழு அளவில் நம்பக்கை கொண்டிருந்தேன். ஆனால், அரசாங்கம் ஏமாற்றிவிட்டது. உக்ரேனின் கிழக்குப் பிராந்தியங்களான டொனற் மற்றும் லுகான்ஸ் ஆகிய இடங்களில் நடந்த வாக்களிப்பில் அரசாங்கம் மோசடி செய்துவிட்டது.



அத்துடன் மத்திய தேர்தல் ஆணைக்குழுவையும் நான் நம்பவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அனைத்து அரசியல்வாதிகளையும் அமைதியாக இருக்குமாறு உக்ரேனின் மத்திய தேர்தல் ஆணைக்குழுவின தலைமையதிகாரி ஷேகி இவாலோவ் தெரிவித்தார். அத்துடன் தேர்தல் ஆணையகத்தால் தேர்தல் காலத்தில தேர்தல் சட்டவிதிகள் அனைத்தும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

உகரேனின் தேர்தல் ஆணையகத்தைச் சூழ இரண்டு ஆயுதம் தரித்த வாகனங்கள் பாதுகாப்பிற்கு நிறுத்தப்பட்டுள்ளதுடன், நான்கு தண்ணீர் பீய்ச்சியடிக்கும் வாகனங்களும் நிறுத்தப்பட்டுள்ளன.

தலைநகர் கிவ் அதி உச்ச பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது மேலதிகமாக பொலிஸாரும், படையினரும் வீதிகளில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

## ஆப்கான் தேர்தலுக்கு சென்றவேளை

# கடத்தப்பட்ட ஐ.நா பணியாளர்களை கண்டுபிடிக்கப் படை நடவடிக்கை!



ஆப்கானில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான உதவிகளை வழங்கும் முகமாக அங்கு சென்ற ஐ.நா. பணியாளர்களில் மூவர் கடந்த மாதம் 28 ஆம் திகதி இஸ்லாமியக் கிளர்ச்சிவாதிகளால் கடத்தப்பட்டனர்.

இவ்வாறு கடத்தப்பட்டவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் அமெரிக்க மற்றும் ஆப்கான் படைகள் ஈடுபட்டுள்ளன.

இவர்களது படைநடவடிக்கை நேற்றுக் காலை ஆப்கான் தலைநகர் காபூலில் இடம்பெற்றது. இதன்போது படையினர் தலைநகரிலுள்ள வீடுகளில் தேடுதல்களை மேற்கொண்டனர். அத்துடன் படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டவேளை அமெரிக்க ஹெலிகொப்டர்களும், அப்பகுதியைச் சுற்றி வட்டமிட்டு படையினருக்கு பாதுகாப்பை வழங்கிக் கொண்டிருந்தன.

இந்தப்படை நடவடிக்கையில் இரணடு வீடுகளை படையினர் தரைமட்டமாக்கினர். அத்துடன் சந்தேகத்தின் பேரில் பத்து பொதுமக்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவர்களில் ஐ.நாவின் வைத்தியரான முனிர் மொசாமெம் என்பவரும் அவரது மகனும் அடங்குவர்.

படையினர் தமது படை நடவடிக்கையின்போது வீதி நெடுகிலும் வெடிபொருட்களைப் பாவித்ததாகவும், இதன்போது வீதியின் இருமருங்கிலுமிருந்த வீடுகளின் கதவுகள் மற்றும் யன்னல்கள் என்பன பாரிய சேதத்திற்குள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப படைநடவடிக்கையானது கடத்தப்பட்ட மூன்று ஐ.நா.பணியாளர்களையும் விடுவிப்பதற்கானதே என அமெரிக்க இராணுவப் பேச்சாளரான லெப்.கேணல் பமீலா கீற்றன் தெரிவித்தார். ஆனாலும், இந்த நடவடிக்கை தொடர்பான மேலதிக விபரம எதனையும் தெரிவிக்க அவர் மறுத்துவிட்டார்.

இதேவேளை படை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் கடத்தப்பட்ட மூவரதும் படங்களை பொதுமக்களுக்கு காட்டி இவர்களை எங்கேயாவது கண்டீர்களா என விசாரித்து வருகின்றனர் என பொதுமக்கள் தெரிவித்தனர். கடத்தப்பட்டவர்களை விடுவிக்கும் முயற்சியில் படையினர் ஈடுபட்டிருப்பது ஆப்கானில் இதுவே முதற்தடவையெனவும் தகவல்கள் தெரிவித்தன.

# சாது மிரண்டால்...

(10 ஆம் பக்க தொடர்ச்சி)

பொதுமக்கள் தயாராகவில்லை. இதனால் இராணுவம் எந்த இலாபத்தையும் சாதித்துக்கொள்ள முடியாது. வெறுமனே சர்வதேசத்துக்குப் பிழையானதொரு தகவலை வழங்கவே இராணுவத்தால் முடியும். ஆனால் சர்வதேசமும் அதனை இலகுவில் நம்பாது.

ஏனெனில் விடுதலைப் புலிகள், பொதுமக்களினது பாதுகாப்பில் எவ்வளவு தூரம் அக்கறையாகவுள்ளார்கள் என்பதை சர்வதேசம் நன்கு அறியும். இதனை நடைபெற்று முடிந்த பல சம்பவங்களும் காட்டி நிற்கின்றன. கட்டுநாயக்க விமானத்தளம் மீதான தாக்குதலின் போதுகூட, பயணிகள் விமானம் ஒன்று தரித்திருந்தபோது, அதிலிருந்து பயணிகள் வெளியேறும் வரை காத்திருந்து எந்தவொரு பயணிக்கும் சிறுகாயம் ஏற்படாத வகையில் தாக்குதலை நடத்தி முடித்தமை விடுதலைப் புலிகள் பொதுமக்களின் பாதுகாப்பிலே எவ்வளவு தூரம் அக்கறையாகவுள்ளார்கள் என்பதை எடுத்துக் காட்டியிருந்தது.

இவ்வாறே குடாநாடு மீது தாக்குதலொன்றை விடுதலைப் புலிகள் தொடுத்தபோது, பல லட்சம் மக்கள் குடாநாட்டிலே இருந்தமையால் தாக்குதலை தீவிரப்படுத்தாது இடைநடுவிலே கைவிட்டமையும், விடுதலைப்புலிகளின் மனிதாபிமானத்தை எடுத்துக் காட்டுவதாக அமைந்திருந்தது. இவ்வாறான நிலை காணப்படும்போது, விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகியே இளைஞர்கள் இருவர்கள் பலியானர்கள் எனக்கூறுவது எவ்வளவு வேடிக்கையான விடயம்! இதனை எவராவது நம்புவார்களா?

மேலும் தனியொரு நபரை சுட்டுக்கொல்வதற்காக எதற்காக இயந்திரத் துப்பாக்கியை பயன்படுத்த வேண்டும். கைத்துப்பாக்கியே போதுமானதே! எனவே இந்த இளைஞர்களின் கொலையானது, ஏற்கனவே திட்டமிட்டே மேற்கொள்ளப்பட்டதேயாகும். இதன் மூலமாக அந்தப் பகுதி இளைஞர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. தேசியத் தலைவரின் பிறந்த தினத்தையும், மாவீரர் தின நிகழ்வுகளையும் கண்டு பொறுக்க மாட்டாதவர்கள் அப்பாவிப் பொதுமக்களை தாக்குவது அவர்களது கையாலாகாத்தனத்தை எடுத்துக் காட்டுகிறது.இது இயலாமையின் வெளிப்பாடாகவே அமைகிறது.

இந்தக் கொலை நடைபெற்ற இடத்தை அண்மித்ததாக படையினரின் முகாம், பொலிஸ் நிலையம் என்பன அமைந்துள்ளன. இவ்வாறான நிலையிலே கொலையொன்று நடைபெற்று முடிந்தமை சந்தேகத்தை தோற்றுவிப்பதாகவேயுள்ளது. இந்த கொலைக்கு இராணுவத்தினரும், பொலிஸாரும் உடந்தையாக இருந்திருக்கிறார்கள் எனும் சந்தேகத்தையும் தோற்றுவிக்கின்றது.

மேலும் பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து மக்கள் போராட்டங்களை அடக்க முற்பட்டமையானது. அவர்களே கொலையை செய்துள்ளார்கள் எனும் ஐயத்தையும் தோற்றுவித்துள்ளது. ஏனெனில், பொதுமக்கள் ஆரம்பத்திலே தமது எதிர்ப்புணர்வை வீதிகளை மறியல் செய்தும், கடைகளை பூட்டியும். போக்குவரத்தை தடைசெய்துமே வெளிக்காட்டியிருந்தனர். இதனை பொலிஸாரும், இராணுவத்தினரும் தடுக்கமுயன்றபோதே பொதுமக்கள தமது எதிர்ப்புணர்வை இராணுவத்துக்கு எதிராக வலுவாக பிரயோகிக்க தொடங்கினர். இந்த எதிர்ப்புணர்வின் உச்சக்கட்டமாகவே இராணுவ காவலரண்களும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இது இராணுவத்துக்கு நல்லதொரு பாடமாக அமைந்திருக்கும்.

இனியும் பொதுமக்களை சீண்டினால் விளைவுகள் விபரீதமாகும் என்பதை படைத்தரப்பு உணர்ந்து கொண்டால் நன்மை அனைவருக்குமே! மாவீரர் வார நிகழ்வுகளுக்கு படையினர் ஒத்துழைப்பு வழங்குவர் எனும் உறுதிமொழி எவ்வளவு தூரம் நம்பக்கூடியதாகவிருக்கும் என்பதை பொறுத்தே பார்க்க வேண்டும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புலிகளுக்கு எதிராக திட்டமிட்ட பொய்ப் பிரசாரம்

## அரச ஊடகங்கள் ஈடுபடுவதாக குற்றச்சாட்டு

வடக்கு கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு இழுக்கு ஏற்படுத்தும் வகையில் அரச ஊடகங்களும் சில தனியார் ஊடகங்களும் திட்டமிட்டு பொய்ப் பிரச்சாரம் செய்து வருவதாக விடுதலைப் புலிகள் குற்றம் சுமத்தியுள்ளர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட தாராவிக்குளம் பிரதேசத்தில் இடம்பெற்ற கிளேமோர் தாக்குதலில் 20 விடுதலைப் புலிகள் பலியானதாக சில ஊடகங்கள் நேற்று செய்தி வெளியிட்டன.

இந்தச்செய்தி தொடர்பாக செய்தியாளர்களுக்கு நேற்று மாலை விளக்கமளித்த மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், இப்படியான சம்பவமொன்று நடைபெறவில்லை என முற்றாக மறுத்தார்.

இத்தகைய பிரசாரங்கள் திட்டமிட்ட நடவடிக்கைகளாகும், மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் மாவீரர் தினம் சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனை குழப்புவதற்காக மக்கள் மத்தியில் பொய் வதந்திகளை ஒரு சாரார் பரப்பி வருகின்றார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

# வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் கைத்தொலைபேசிகள், கத்திகள்!

வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் நடத்தப்பட்ட தேடுதலின்போது செல்போன்கள் மற்றும் கத்திகள் என்பன மீட்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை இரவு நடத்தப்பட்ட தேடுதல் ஒன்றின் போதே இவை மீட்கப்பட்டதாக சிறைச்சாலை அதிகாரி மர்சூக் தெரிவித்தார்.

நான்கு செல்போன்கள், 20 கத்திகள் போன்றவையே கைப்பற்றப்பட்டிருப்பதாகவும், சிறைச்சாலை பாதுகாப்புக்களை மீறி இவை எவ்வாறு உள்ளே கொண்டு செல்லப்பட்டன என்பது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நான்கு நட்சத்திர ஜெனரலாக ஜெயவர்த்தனவுக்கு பதவியுயர்வு!

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்படவிருக்கும் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன - நான்கு நட்சத்திர ஜெனரலாகப் பதவியுயர்த்தப்படவிருப்பதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதி இவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்படவுள்ளதாலேயே, ஓய்வுபெற்ற இலகு காலாற்படை அதிகாரியான மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனவுக்கு இந்தப் பதவியுயர்வு வழங்கப்படவிருக்கிறது.

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுனராக தற்போது கடமையாற்றும் இவர், திருகோணமலையில் கடந்த வாரம் தனது சக நண்பர்களுடன் உரையாடியபோது, தான் நியமனக் கடிதத்தை எதிர்பார்த்திருப்பதாகக் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மின்சாரம்...

ராவார். நேற்றுமுன்தினமிரவு வீட்டில் படம்பார்த்துக்கொண்டிருந்தவேளை தொலைக்காட்சியைச் சீர்செய்வதற்காக அன்ரனாவைத் திருப்பியவேளை, தவறுதலாக கைநழுவி மின்கம்பிக்கு மேல்பட்டதால் மின்சாரம் தாக்கியதில குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்தார். (14)

## முஸ்லிம்...

வர் இவரை அழைத்துத் துப்பாக்கி பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. மொகமட் ஹாதின் என்ற இளைஞரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டதாக அடையாளம் காணப்பட்டார்.

## ஜனாதிபதி...

கொண்டிருந்த - ஜே.விமலதேவன் என்ற மருதானையைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு படப்பிடிப்பில் ஈடுபட்டிருந்த போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைதான இளைஞர் கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் விசாரணை செய்யப்பட்டு வருகிறார்.

## இலங்கைக்கு...

ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான குழுவில் - வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அமைச்சர்கள் அனுரபிரியதர்சன யாப்பா, சுசில் பிறேமஜயந்த, பிரதி வெளிவிவகார அமைச்சர் விஸ்வ வர்ணபால, ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் திறைசேரி, பாதுகாப்பு அமைச்சு செயலாளர்கள் ஆகியோர் பங்கு கொண்டிருந்தனர்.

நீண்டநேரம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இருதரப்பு இராணுவ ஒத்துழைப்புக் குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன் - இரண்டு நாடுகளுக்கும் இடையில் சிறப்பான இராணுவ ஒத்துழைப்பைப் பேணுவதற்கும் இணக்கம் காணப்பட்டிருக்கிறது.

அத்துடன் இலங்கைக்கு 20 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஆயுததளபாடங்களை கடனுதவி அடிப்படையில் வழங்குவதற்கும் பாகிஸ்தான் இணக்கம் தெரிவித்திருந்தது. இது தொடர்பாக இருதரப்பு கூட்டறிக்கையிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்தச் சந்திப்பின் பின்னர் செய்தியார்களிடம் பேசிய பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அஸீஸ் -

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் மிகவும் நெருக்கமானதும் இறுக்கமானதுமான இராணுவ ஒத்துழைப்பு பேணப்பட்டுவருகிறது. இந்த உறவைத் தொடர்வதற்கு இணக்கம் காணப்பட்டிருக்கிறது எனத் தெரிவித்தார்.

இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்க பாகிஸ்தான் பிரதமர் மறுத்துவிட்டார்.

அத்துடன் இது அந்த இரண்டு நாடுகளினதும் விவகாரம் என்று தெரிவித்த பாகிஸ்தான் பிரதமர் - இலங்கையுடன் தமது பாதுகாப்பு உறவுகள் சிறப்பான நிலையில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டின் மீது புலிகள் 2000 ஆம் ஆண்டு பாரிய தாக்குதல் தொடுத்தபோது பாகிஸ்தான் அரசு பெருமளவு இராணுவத் தளபாடங்களை இலங்கைக்கு வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## மருதமுனையில் நேற்று

# பொலிஸாருக்கு எதிராக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

கல்முனை, மருதமுனை சம்ஸ் மத்திய கல்லூரி மாணவர்கள் நேற்று பொலிஸாருக்கு எதிராக வீதியில் இறங்கி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த மாதம் 23 ஆம் திகதி மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு, பள்ளிவாசலுக்கு அருகாமையில் வீசப்பட்ட தமது சக மாணவன் முகமது முபாறக் முகமது பாசித் (15 வயது) கொலை தொடர்பான விசாரணைகளில் ஏற்படும் தாமதத்தைக் கண்டித்து இந்த ஆர்ப்பாட்டத்தில் மாணவர்கள் ஈடுபட்டனர். ஆர்பாட்டத்தில் கலந்து கொண்ட மாணவர்கள், இந்தக் கொலை தொடர்பான விசாரணைகள் துரிதப்படுத்தவேண்டும்.

குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும் போன்றவை உள்ளிட்ட சில கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்திய வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## நள்ளிரவு வரை ...

இந்தச் சந்திப்பிலேயே மாவீரர் தினத்தன்று சோதனைச் சாவடிகளை நள்ளிரவு வரை திறந்து வைக்க நடவடிக்கை எடுக்கும் படி புலிகள் தரப்பினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இது குறித்து மேலிடத்துக்குத் தாம் தெரிவிப்பதாகவும், புலிகள் இந்தக் கோரிக்கையை சமாதானச் செயலகம் ஊடாக முன்வைக்கும் படியும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

## நீதிபதிகளின் பாதுகாப்பு...

காப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பாதுகாப்பு வழங்கப்படுவது தொடர்பாக விசேட அதிரடிப் படைத் தளபதி டி.ஐ.ஜி.நிமால் லியூகே தெரிவிக்கையில் கடந்த சனிக்கிழமை ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் இடம்பெற்ற பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் நீதிபதிகளுக்கு விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பு வழங்கப்படுவதென் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்துக்கு சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் ரட்ண சிறி விக்கிரமநாயக்க மற்றும் படை அதிகாரிகள், பொலிஸ்மா அதிபர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேல்மாகாணத்தலுள்ள 40 நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கு அதிரடிப்படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. நீதிபதிகளின் பாதுகாப்பு அவர்களது வதிவிடங்கள் அல்லது விடுதிகள், நீதிமன்றங்கள் மற்றும் நீதிமன்றங்களில் இருந்து திரும்புதல் போன்றனவாக இருக்கும்.

பொலிஸார் நீதிமன்றக் கட்டடங்களையும், அதிகாரிகளின் விடுதிகளையும் பாதுகாப்பர். ஆனால், விசேட அதிரடிப்படையினர் நீதிபதிகளை மட்டுமே பாதுகாப்பர் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை உயர் நீதிமன்ற நீதியரசர் சரத் அம்பேபிட்டியவை கொலை செய்த சந்தேக நபர்கள் நான்கு பேரின் புகைப் படங்களை பொலிஸார் நேற்று வெளியிட்டனர்.

நீதியரசரை மிகவும் சக்தி வாய்ந்த பாதாள உலகக் குழுவொன்றே கொலைசெய்துள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அத்துடன் இந்தக் கொலையுடன் விடுதலைப் புலிகளும் சம்பந்தப்பட்டுள்ளார்களா எனவும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மட்டக்களப்பு நகரப்...

காலை 7.30 வரை பொலிஸாரும் இராணுவத்தினரும் மூன்று பிரிவுகளாகப் பிரிந்து சென்று சமகாலத்தில் இந்தத் தேடுதலை மேற்கொண்டனர். சிங்கள வாடியில் கடந்த சனிக்கிழமை குண்டு வீசப்பட்ட வீட்டு வளவுக்குள் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது அந்த வளவுக்குள் இருந்து கைக்குண்டொன்று பொதியிடப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டது.

வீட்டிற்கு வெளியே நிலத்தை தோண்டியும் சோதனைகள் மேற்கொளளப்பட்டன. அதிகாலை நேரம் திடீரென பொலிஸாரும் இராணுவத்தினரும் தூக்கத்திலிருந்த தங்களை தட்டியெழுப்பியதால் தாம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியதாக வீட்டு உரிமையாளர்கள் அதிருப்தி வெளியிட்டனர்.

மட்டக்களப்பு நகரில் படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் ஐ.நடேசனின் வீட்டிற்கு அருகில் உள்ள அவரது மைத்துனரின் வீடும் சோதனைக்குட்படுத்தப்பட்டது. மட்டக்களப்பு மாநகர சபையின் மறைந்த பிரதி மேயர் டாக்டர் ஆ. ஞானப்பிரகாசத்தின் வீடும் சோதனைக்குள்ளானது என்பது குறிப்பிடத்தக்கது.


மட்டக்களப்பு நகரில் பொலிஸாரும் இராணுவத்தினரும் கூட்டாக மேற்கொண்ட தேடுதலின் போது 19 வயது இளைஞரொருவர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மயிலம்பாவெளியைச் சேர்ந்த கணேசமூர்த்தி சசிதரன் என்ற இந்த இளைஞர் ஜி.வி. வைத்திய சாலைக்கு முன்பாக உள்ள தேனீர் கடையொன்றில் உணவு அருந்திக் கொண்டிருந்த சமயம் அவர் கைது செய்யப்பட்டார். இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் பணியாற்றும் பொலிஸாரின் விடுமுறைகள் எதிர்வரும் 27 ஆம் திகதிவரை இரத்து செய்யப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் மாவீரர் வாரத்தை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள விசேட பாதுகாப்பு நடவடிக்கையின் நிமித்தம் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கிழக்கு பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் நெவில் விஜயசிங்க தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் மாவீரர் திருவுருவப்படங்கள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ள பட்டிருப்பு மகாவித்தியாலய மண்டபத்திற்கு நாளை மறுதினம் முதல் 27 ஆம் திகதி வரை விசேட பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மன்னார் மாவட்டத்தில் சூறாவளி அபாயம்!



சூறாவளியைக் காட்டும் செய்மதிப்படம்

நாட்டின் வடக்கு - கிழக்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களில் நேற்றுமுதல் கடும்மழை பெய்து வருகிறது. இந்த மழை இன்றும் நீடிக்குமெனவும், அடுத்த சில நாட்களில் மன்னார் மாவட்டத்தில் சூறாவளி தாக்கக்கூடிய ஆபத்து இருப்பதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கையிலிருந்து பல நூறு மைல் தொலைவில் சூறாவளி ஒன்று மையங்கொண்டிருக்கிறது. இது அடுத்த சில நாட்களில் மன்னாரைத் தாக்கக்கூடும். இதனால் பொதுமக்கள் விழிப்பாக இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். இதேவேளை தற்போதுள்ள தாழமுக்கத்தினால் நாட்டின் வடக்கு - கிழக்கு வடமேற்கு மாகணங்களில் பலத்த மழைபெய்து வருகிறது.

நேற்று குடாநாட்டில் பரவலாகப் பெய்த கடும்மழையினால் தாழ்வான பகுதியில் வெள்ளம் ஏற்பட்டதுடன் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர். இன்றும் தொடர்ந்து மழை பெய்யும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வடக்கு கிழக்கு பகுதிகளில் 20 முதல் 40 கிலோ மீற்றர் வேகத்தில் பலமாகக் காற்று வீசுமென்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது. (01)

**உங்களுக்காகவே!**

- ☆ சிறந்த முறையில் சங்குப் பற்களைக் கட்டிட
- ☆ மிதப்புப் பற்களுக்கு இலகுமுறையில் கிளிப் பொருத்தி சீர்செய்திட
- ☆ நவீன வடிவமைப்புடைய மூக்குக் கண்ணாடிகளை விரைவில் பெற்றிட
- ☆ இலவசக் கண் பரிசோதனை செய்திட

(3387)

உடனே விரையுங்கள்!

துஷா பல் மூக்குக் கண்ணாடி அகம்
554. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 3461 - 0777 150032

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 23.11.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.